# AKILA PRESS RELEASE

# 2018-2019

தினமலர்

வெள்ளி ஜனவரி 5, 2018

# கல்லூரியில் ஆன்லைன் பயிற்சி பட்டறை

வந்தவாசி, ஜன.5–

வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் தேசிய தொழில் நுட்பம் மேம்பட்ட கல்வி வாயிலாக ஆன்லைன் மூலம் தேர்வு எழுதி சான்று பெறுவதற்கான பயிற்சி பட்டறை நடந்தது.

தேசிய தொழில் நுட்பம் வயிலாக நடந்த பயிற்சிக்கு கல்லூரி நிறுவனர் முனிரத்தினம் தலைமை வகித்தார். துணை முதல்வர் சுகுணா வரவேற்றார்.பயிற்சி பட்டறையை முதல்வர் மைதிலி துவக்கி வைத்தார்.

அனைவரும் இருக்கும் இடத்திலிருந்தே 'ஆன்லைன்' மூலமாக தேர்வு எழுதி சான்று பெறுவதற்கான ஆலோசனைகளை சென்னை ஐஐடி., நிப்பில் புராஜெக்ட் ஆபிசர்கள் கமலா ராமகிருஷ்ணன், திவ்யா கார்த்திக், கோவை என்ஜிபி கல்லூரி பேராசிரியர் ராஜேஷ்கண்ணா ஆகியோர் பங்கேற்றுப்பேசினர்.

இதையடுத்து தேர்வுகளில் பங்கேற்று எழுதுவது. அதன் விதிமுறைகள் குறித்தும் பேசினர்.

இந்த பயிற்சி பட்டறையில் தமிழகத்தில் உள்ள 47 கல்லூரிகளிலிருந்து 104 பேராசிரியர்கள் பங்கேற்றுப் பேசினர். பேராசிரியர்கள் மற்றும் மாணவிகளுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டது.

இயற்பியல்துறை பேராசிரியர் செல்வகுமார் நன்றி கூறினார்.



தினகரன்

6.1.2018

## ஆன்லைன் மூலம் தேர்வு எழுதுவது குறித்து

# வந்தவாசி அகிலாண்டேஸ்வரி கல்லூரியில் பேராசிரியர்களுக்கு பயிற்சி

வந்தவாசி, ஜன.6: ஆன்லைன் மூலம் தேர்வு எழுதுவது குறித்து பேராசிரியர்களுக்கு ஒரு நாள் பயிற்சி வகுப்பு வந்தவாசி அகிலாண்டேஸ்வரி கல்லூரியில் நடந்தது.

தேசிய நிரல் தொழில்நுட்பம் மேம்பாட்ட கல்வி வாயிலான அனைவரும், அனைத்து நேரத்திலும் இருக்கும் இடத்தில் இருந்தே ஆன்லைன் மூலமாக தேர்வு எழுதி சான்றிதழ் பெறுவதற்கான ஒருநாள் பயிற்சி வகுப்பு வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி வளாகத்தில் நடந்தது.




வந்தவாசி அகிலாண்டேஸ்வரி கல்லூரியில் ஆன்லைன் மூலம் தேர்வு எழுதுவது குறித்து நடந்த பயிற்சி வகுப்பில் சிறப்பிடம் பிடித்த பேராசிரியைகளுக்கு கல்லூரி நிறுவனர் பா.முனிரத்தினம் சான்றிதழ் வழங்கினார். உடன் கல்லூரி முதல்வர் எஸ்.மைதிலி.

நிகழ்ச்சிக்கு கல்லூரி நிறுவனர் பா.முனிரத்தினம் தலைமை தாங்கினார். கல்லூரி செயலாளர் எம்.ரமணன் முன்னிலை வகித்தார். கல்லூரி துணை முதல்வர் கே.சுகுணா வரவேற்றார். பயிற்சி வகுப்பை கல்லூரி முதல்வர் எஸ்.மைதிலி தொடக்கிவைத்தார். நிகழ்ச்சியில் ஆன்லைன் மூலமாக பயில்வது குறித்தும், தேர்வு எழுவது குறித்து விளக்கி சென்னை ஐஐடி திட்ட அலுவலர்கள் கமலாராமகிருஷ்ணன், திவ்யா கார்த்திக், கோவை என்.ஜி.பி கல்லூரி பேராசிரியர் ஆர்.ராஜேஸ்கண்ணா ஆகியோர் கலந்துகொண்டு பயிற்சி அளித்தனர். இந்த பயிற்சி வகுப்பில் 47 கல்லூரிகளை சேர்ந்த 104 பேராசிரியர்கள் கலந்துகொண்டனர். இதில் சிறப்பிடம் பிடித்த பேராசியர்களுக்கு கல்லூரி சார்பில் பரிசுகள் வழங்கப்பட்டது. முடிவில் கல்லூரி இயற்பியில் துறை பேராசிரியர் செல்வகுமார் நன்றி கூறினார்.

தினமணி

வெள்ளிக்கிழமை, 12 ஜனவரி 2018




1)வந்தவாசி ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி மகளிர் கல்வியியல் கல்லூரியில் பொங்கல் வைத்த மாணவிகள். 2) ஆரணி டாக்டர் எம்ஜிஆர் பாலிடெக்னிக் கல்லூரியில் நடைபெற்ற பொங்கல் விழாவில் கலந்து கொண்டோர். 3)கடப்பந்தல் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் நடைபெற்ற பொங்கல் விழா.

**வந்தவாசி/ போளூர்/ ஆரணி, ஜன.11:** வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்வியியல் கல்லூரி, ஆரணி டாக்டர் எம்ஜிஆர் பாலிடெக்னிக் கல்லூரி, கடப்பந்தல் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி ஆகியவற்றில் பொங்கல் விழா வியாழக்கிழமை கொண்டாடப்பட்டது.

வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்வியியல் கல்லூரி நடைபெற்ற சமத்துவ பொங்கல் விழாவுக்கு கல்வி நிறுவனத் தலைவர் பி.முனிரத்தினம் தலைமை வகித்தார். செயலர் எம்.ரமணன், ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி முதல்வர் எஸ்.மைதிலி, துணை முதல்வர் கே.சுகுணா, ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்வியியல் கல்லூரி முதல்வர் எம்.சண்முகம் மற்றும் பேராசிரியைகள், மாணவிகள் பங்கேற்றனர். இதையொட்டி, மாணவிகள் கோலமிட்டும், புதுப்பானையில் பொங்கலிட்டும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

மேலும், ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் உடல் ஆரோக்கியம், ஊட்டச்சத்து சங்கம் சார்பில் கருத்தரங்கம் வியாழக்கிழமை நடைபெற்றது. இதில், குழந்தை நல மருத்துவர் கே.அருளாளன் ரத்த சோகை நோய் குறித்து விளக்கிப் பேசினார்.

மேலும், இந்தக் கல்லூரியில் மகளிர் மேம்பாட்டு சங்கம் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஜெயஸ்ரீ நாராயணன், மாணவிகளுக்கு தஞ்சாவூர் ஓவியம் தீட்டும் பயிற்சியை அளித்தார்.

**ஆரணி:** ஆரணி டாக்டர் எம்ஜிஆர் பாலிடெக்னிக் கல்லூரியில் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. விழாவில் கல்லூரிச் செயலர் ஏ.சி.இரவி தலைமை வகித்தார். கல்லூரி முதல்வர் ஆறுமுக முதலி முன்னிலை வகித்தார்.

விழாவையொட்டி, கல்லூரி மாணவிகள், வண்ணக் கோலமிட்டு, கரும்பு, மஞ்சள் உள்ளிட்ட பொருள்களை வைத்து பொங்கல் கொண்டாடினர். மேலும், கோலப் போட்டிகள், பட்டிமன்றம் நடைபெற்றன. இவற்றில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. இதில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

**போளூர்:** இதேபோல, பெரணமல்லூரை அடுத்த கடப்பந்தல் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் மாணவ, மாணவிகள் புதுப்பானையில் புத்தரிசி இட்டு பொங்கல் வைத்துக் கொண்டாடினர். விழாவில் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் கோ.குணசேகரன் கலந்து கொண்டு, தமிழரின் பாரம்பரியம், வாழ்வியல் பண்பாடு, நெறிமுறைகள் குறித்து கூறினார். இதில், பள்ளித் தலைமை ஆசிரியர் சி.ஆறுமுகம், ஆசிரியர்கள் ஆர்.இந்திராணி, ஜெ.பாண்டுரங்கன், க.பழனி, முன்னாள் தலைவர் அண்ணாமலை மற்றும் ஊர் முக்கியப் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

தினமணி

வியாழக்கிழமை, 25 ஜனவரி 2018

# தேசிய வாக்காளர் தின விழா



விழாவில் பேசுகிறார் செய்யாறு கோட்டாட்சியர் பி.கிருபானந்தம்.

வந்தவாசி, ஜன.24: வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் தேசிய வாக்காளர் தின விழா புதன்கிழமை நடைபெற்றது.

விழாவுக்கு கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம் தலைமை வகித்தார். கல்லூரிச் செயலர் எம்.ரமணன், கல்லூரி முதல்வர் எஸ்.மைதிலி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி தமிழ்த் துறை பேராசிரியை எ.கலைவாணி வரவேற்றார்.

செய்யாறு கோட்டாட்சியர் பி.கிருபானந்தம், வந்தவாசி வட்டாட்சியர்கள் கே.ஆர்.முரளிதரன், ஜெ.சேகர் ஆகியோர் வாக்களிப்பதன் அவசியம் குறித்து சிறப்புரை ஆற்றினர்.

தேர்தல் துணை வட்டாட்சியர் சுமதி, வருவாய் ஆய்வாளர் ஆனந்தகுமார், கிராம நிர்வாக அலுவலர் டி.ஈ.வெங்கிடேசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். கல்லூரி மாணவிகள் பங்கேற்ற வாக்களிப்பதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு நாடகம் நடைபெற்றது.

ஞாயிற்றுக்கிழமை, 28 ஜனவரி, 2018

தினமணி

**பள்ளிகள், கல்லூரிகளில்...:** வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற விழாவில் கல்லூரி முதல்வர் எஸ்.மைதிலி தேசியக் கொடியேற்றினார். கல்லூரிச் செயலர் எம்.ரமணன் கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்ற மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கினார்.

# கல்வி நிறுவனங்களில் பொங்கல் விழா







1)வந்தவாசி ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி மகளிர் கல்வியியல் கல்லூரியில் பொங்கல் வைத்த மாணவிகள். 2) ஆரணி டாக்டர் எம்ஜிஆர் பாலிடெக்னிக் கல்லூரியில் நடைபெற்ற பொங்கல் விழாவில் கலந்து கொண்டோர். 3)கடப்பந்தல் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் நடைபெற்ற பொங்கல் விழா.

**வந்தவாசி/ போளூர்/ ஆரணி, ஜன.11:** வந்தவாசி ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி மகளிர் கல்வியியல் கல்லூரி, ஆரணி டாக்டர் எம்ஜிஆர் பாலிடெக்னிக் கல்லூரி, கடப்பந்தல் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி ஆகியவற்றில் பொங்கல் விழா வியாழக்கிழமை கொண்டாடப்பட்டது.

வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்வியியல் கல்லூரி நடைபெற்ற சமத்துவ பொங்கல் விழாவுக்கு கல்வி நிறுவனத் தலைவர் பி.முனிரத்தினம் தலைமை வகித்தார். செயலர் எம்.ரமணன், ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி முதல்வர் எஸ்.மைதிலி, துணை முதல்வர் தே.சுகுணா, ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்வியியல் கல்லூரி முதல்வர் எம்.சண்முகம் மற்றும் பேராசிரியைகள், மாணவிகள் பங்கேற்றனர். இதையொட்டி, மாணவிகள் கோலமிட்டும், புதுப்பானையில் பொங்கலிட்டும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

மேலும், ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் உடல் ஆரோக்கியம், ஊட்டச்சத்து சங்கம் சார்பில் கருத்தரங்கம் வியாழக்கிழமை நடைபெற்றது. இதில், குழந்தை நல மருத்துவர் கே.அருளாளன் ரத்த சோகை நோய் குறித்து விளக்கிப் பேசினார்.

மேலும், இந்தக் கல்லூரியில் மகளிர் மேம்பாட்டு சங்கம் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஜெயஸ்ரீ நாராயணன், மாணவிகளுக்கு தஞ்சாவூர் ஓவியம் தீட்டும் பயிற்சியை அளித்தார்.

**ஆரணி:** ஆரணி டாக்டர் எம்ஜிஆர் பாலிடெக்னிக் கல்லூரியில் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. விழாவில் கல்லூரிச் செயலர் ஏ.சி.இரவி தலைமை வகித்தார். கல்லூரி முதல்வர் ஆறுமுக முதலி முன்னிலை வகித்தார்.

விழாவையொட்டி, கல்லூரி மாணவிகள் வண்ணக் கோலமிட்டு, கரும்பு, மஞ்சள் உள்ளிட்ட பொருள்களை வைத்து பொங்கல் கொண்டாடினர். மேலும், கோலப் போட்டிகள், பட்டிமன்றம் நடைபெற்றன. இவற்றில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. இதில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

**போளூர்:** இதேபோல, பெரணமல்லூரை அடுத்த கடப்பந்தல் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் மாணவ, மாணவிகள் புதுப்பானையில் புத்தரிசி இட்டு, பொங்கல் வைத்துக் கொண்டாடினர். விழாவில் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் கோ.குணசேகரன் கலந்து கொண்டு, தமிழரின் பாரம்பரியம், வாழ்வியல் பண்பாடு, நெறிமுறைகள் குறித்து கூறினார். இதில், பள்ளித் தலைமை ஆசிரியர் சி.ஆறுமுகம், ஆசிரியர்கள் ஆர்.இந்திராணி, ஜெ.பாண்டுரங்கன், க.பழனி, முன்னாள் தலைவர் அண்ணாமலை மற்றும் ஊர் முக்கியப் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

தி இந்து

27/01/18




▲ விநாடி-வினா போட்டியில் வெற்றிபெற்ற மாணவிகளுக்கு புத்தகங்களை வழங்கிய வாசகர் வட்டத் தலைவர் கவிஞர் முருகேஷ்.

## தேசிய நூலக வார வாசிப்பு விழா

வந்தவாசி

வாசகர் வட்டம் மற்றும் அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி இணைந்து நடத்திய தேசிய நூலக வார வாசிப்பு விழிப்புணர்வு விழா, திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி கிளை நூலகத்தில் நடைபெற்றது.

கிளை நூலகர் சண்முகம் வரவேற்றார்.

புத்தக விநாடி-வினா போட்டியில் வெற்றிபெற்ற கல்லூரி மாணவிகள் எழில் வாணி, அன்புச்செல்வி, ஐஸ்வர்யா, திவ்யா, சிந்துஜா, தெய்வானை, தி.சங்கீதா, இலக்கியா, லதா, பவித்ரா ஆகியோருக்கு புத்தகங்களை வழங்கி வாசகர் வட்டத் தலைவர் கவிஞர் முருகேஷ் பாராட்டினார். கல்லூரி மாணவிகள் 192 பேர் நூலக உறுப்பினர்களாக இணைந்தனர்.

விழாவில், நூலக உதவியாளர் நாராயணன் உட்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில், கிளை நூலகர் தமீம் நன்றி கூறினார்.

தினமணி

திங்கள்கிழமை, 29 ஜனவரி, 2018

# புத்தக வாசிப்பு விழிப்புணர்வு விழா




விழாவில் மாணவிக்கு பரிசு வழங்குகிறார் வந்தவாசி நூலக வாசகர் வட்டத் தலைவர் மு.முருகேஷ்.

வந்தவாசி, ஜன.28: வந்தவாசி அரசு கிளை நூலகத்தில் புத்தக வாசிப்பு விழிப்புணர்வு விழா சனிக்கிழமை நடைபெற்றது.

வந்தவாசி நூலக வாசகர் வட்டம், வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி ஆகியவை சார்பில் நடைபெற்ற இந்த விழாவுக்கு நூலக வாசகர் வட்டத் தலைவர் மு.முருகேஷ் தலைமை வகித்தார். கிளை நூலகர் க.மோகன் வரவேற்றார்.

ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி நூலகர் கே.கலாராணி, உதவி நூலகர் எஸ்.காந்திமதி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். விழாவில் இந்தக் கல்லூரியைச் சேர்ந்த 192 மாணவிகள் நூலகத்தில் உறுப்பினர்களாக இணைந்தனர். மேலும், வினாடி - வினா போட்டிகளில் வெற்றி பெற்ற கல்லூரி மாணவிகளுக்கு புத்தகங்கள் பரிசாக வழங்கப்பட்டன.

வியாழக்கிழமை, 1 பிப்ரவரி 2018

தினமணி

# கல்லூரியில் பொருள்கள் விற்பனைச் சந்தை



வந்தவாசி ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற சந்தையை பார்வையிட்ட திருவண்ணாமலை மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர் பா.ஜெயசுதா.

**வந்தவாசி, ஜன.31:** தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி ஆகியவை சார்பில், மாணவிகள், மகளிர் சுயஉதவிக் குழுவினர் தயாரித்த பொருள்களின் விற்பனைச் சந்தை கல்லூரி வளாகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதில், திருவண்ணாமலை, வேலூர், காஞ்சிபுரம் உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த மகளிர் சுயஉதவிக் குழுவினர், இந்தக் கல்லூரி மாணவிகள் தாங்கள் தயாரித்த பல்வேறு பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்தனர்.

நிகழ்ச்சிக்கு கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம் தலைமை வகித்தார். கல்லூரிச் செயலர் எம்.ரமணன் முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் எஸ்.மைதிலி வரவேற்றார். திருவண்ணாமலை மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர் பா.ஜெயசுதா, சந்தையை தொடக்கி வைத்து பார்வையிட்டார். மகளிர் திட்ட உதவி அலுவலர்கள் சி.டி.நாராயணசாமி, ஒய்.ஜான்சன், கல்லூரி துணை முதல்வர் கே.சுகுணா உள்ளிட்டோர் பங்கேற்றனர். இந்த சந்தையில் விற்பனை செய்யப்பட்ட பொருள்களை கல்லூரி மாணவிகள் மற்றும் பொதுமக்கள் வாங்கிச் சென்றனர்.

தி இந்து

புதன், ஜனவரி 31, 2018

## மகளிர் சுயஉதவி குழுக்களால் தயாரிக்கப்பட்ட

# பொருட்களின் விற்பனை கண்காட்சி

■ வந்தவாசி

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம் சார்பில், மகளிர் சுயஉதவி குழுக்களால் தயாரிக்கப்பட்ட பொருட்களின் விற்பனை கண்காட்சி திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசியில் நேற்று நடைபெற்றது.

கல்லூரி நிறுவனர் முனிரத்தினம் தலைமை வகித்தார். மகளிர் திட்ட உதவி அலுவலர் நாராயணசாமி, வட்டார வளர்ச்சி அலுவலர் பாரி உட்பட பலர் முன்னிலை வகித்தனர். விற்பனை கண்காட்சியை, மகளிர் திட்ட இயக்குநர் ஜெய சுதா தொடங்கி வைத்தார்.

விழுப்புரம், வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்களைச் சேர்ந்த மகளிர் சுய உதவி குழுக்கள் தயாரித்த மண் புழு உரம், மரப் பொருட்கள், மண் உண்டியல்கள், சணல் பைகள், வயர் கூடைகள், கைவினைப் பொருட்கள், ஆயத்த ஆடைகள், அலங்கார பொருட்கள், உணவு வகைகள், மூலிகைப் பொடிகள், சோப்பு, பற்பொடி, சிறுதானிய உணவு வகைகள், பட்டு நூலால் தயாரித்த கம்மல் உள்ளிட்ட பொருட்கள் விற்பனை கண்காட்சியில் வைக்கப்பட்டன. இதில், உதவி திட்ட அலுவலர்கள் ஜான்சன், முருகானந்தம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



1.2.2018 ● வியாழக்கிழமை

தினகரன்

அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில்

# கல்லூரி சந்தை விழா



▶ வந்தவாசி அகிலாண்டேஸ்வரி கல்லூரியில் மாவட்ட மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் நடந்த கல்லூரி சந்தை விழாவை மாவட்ட மகளிர் திட்ட இயக்குனர் பா.ஜெயசுதா பார்வையிட்டார். உடன் கல்லூரி நிறுவனர் பா.முனிரத்தினம்.

வந்தவாசி, பிப்.1: வந்தவாசி அகிலாண்டேஸ்வரி கல்லூரியில் மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் கல்லூரி சந்தை விழா நடந்தது.

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், மாவட்ட வழங்கல் விற்பனை சங்கம் மற்றும் வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி இணைந்து கல்லூரி வளாகத்தில் நேற்று முன்தினம் கல்லூரி சந்தை விழா நடத்தின.

கல்லூரி நிறுவனர் பா.முனிரத்தினம் தலைமை தாங்கினார். மகளிர் குழுக்களால் தயாரிக்கப்பட்ட பொருட்கள் அடங்கிய விற்பனை நிலையத்தை மாவட்ட மகளிர் திட்ட இயக்குனர் பா.ஜெயசுதா தொடக்கி வைத்தார். தொடர்ந்து, சந்தை அரங்கை பார்வையிட்டு பொருட்களை வாங்கினார்.

இதில் கல்லூரி செயலாளர் எம்.ரமணன், கல்லூரி முதல்வர் எஸ்.மைதிலி, மகளிர் திட்ட அலுவலர்கள் நாராயணசாமி, ஜான்சன், கல்லூரி துணை முதல்வர் கே.சுகுணா, வி.முருகானந்தம், சிவக்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர். மூன்று நாள் நடைபெறும் இந்த சந்தை விழா இன்றுடன் (1ம் தேதி) நிறைவடைகிறது.

தினமலர்

ஞாயிறு பிப்ரவரி 4, 2018




வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் நடந்த எம்ஜிஆர் கல்வி சாதனை விழாவில் முன்னாள் அமைச்சர் நல்லுசாமி பேசினார். உடன் மனிதநேய அறக்கட்டளை நிறுவனர் சைதை துரைசாமி, லயன்ஸ் கிளப் முன்னாள் கவர்னர்கள் குமணன், தளபதி, கல்லூரி நிறுவனர் முனிரத்தினம், நிர்வாக இயக்குனர் மணி உள்ளிட்ட பலர்.

# எம்ஜிஆர் கல்வி சாதனை விழா

வந்தவாசி, பிப். 4—

வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் சுவாமி அபேதானந்தா கல்வி அறக்கட்டளை சார்பில் எம்ஜிஆர் கல்வி சாதனை விழா நடந்தது. கல்லூரி நிறுவனர் முனிரத்தினம் தலைமை வகித்தார். அரிமா கிளப் முன்னாள் மாவட்ட ஆளுனர் தளபதி, வேலூர் பல்கலைக்கழக சிண்டிகேட் உறுப்பினர் ரமணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முதல்வர் மைதிலி வரவேற்றார்.

விழாவில் சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் அமைச்சரும், திருச்சி காவேரி பொறியியல் கல்லூரி நிறுவனருமான நல்லுசாமி, சென்னை மனிதநேய அறக்கட்டளை நிறுவனர் சைதை துரைசாமி, முன்னாள் அரிமா கிளப் ஆளுனர் காஞ்சிபுரம் குமணன், முன்னாள் எம்எல்ஏ., காஞ்சிபுரம் ஜெய்பாலாஜி, தெள்ளாறு சுவாமி அபேதானந்தா கல்லூரி நிர்வாக இயக்குனர் டிகேபி. மணி ஆகியோர் பங்கேற்று எம்ஜிஆர் கல்வியில் சாதனை படைத்திருப்பது பற்றிப்பேசினர்.

மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடந்தது.

தினத்தந்தி

4-2-2018




அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில்

# எம்.ஜி.ஆரின் கல்வி சாதனை விழா

வந்தவாசி, பிப்.4-

வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் சுவாமி அபேதானந்தா கல்வி அறக்கட்டளை சார்பில் எம்.ஜி.ஆரின் கல்வி சாதனை விழா நேற்று நடந்தது. கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம் தலைமை தாங்கினார். முன்னாள் அரிமா மாவட்ட ஆளுனர் வி.எஸ்.தளபதி முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் எஸ்.மைதிலி வரவேற்றார். அரிமா மாவட்ட ஆளுனர் கே.பி.குமணன் சிறப்பு விருந்தினர்களை அறிமுகம் செய்து வைத்து பேசினார்.

சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் அமைச்சரும், திருச்சி காவேரி பொறியியல் கல்லூரி நிறுவனருமான நல்லுசாமி, முன்னாள் மேயரும், மனித நேய அறக்கட்டளை நிறுவனருமான சைதை.சா.துரைசாமி, காஞ்சிபுரம் முன்னாள் எம்.எல்.ஏ. கே.ஜெய்பாலாஜி ஆகியோர் கலந்து கொண்டு எம்.ஜி.ஆரின் கல்வி சாதனை குறித்து பேசினர்.

விழாவில் தெள்ளார் சுவாமி அபேதானந்தா பாலிடெக்னிக் கல்லூரி நிர்வாக இயக்குனர் டி.கே.பி.மணி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

ஞாயிற்றுக்கிழமை, 4 பிப்ரவரி 2018

தினமணி

# எம்ஜிஆரின் கல்வி சாதனை விழா




விழாவில் பேசிய சென்னை முன்னாள் மேயரும், மனிதநேய அறக்கட்டளை நிறுவனருமான சைதை சா.துரைசாமி.

வந்தவாசி, பிப்.3: சுவாமி அபேதானந்தா கல்வி அறக்கட்டளை சார்பில், எம்ஜிஆரின் கல்வி சாதனை விழா வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் சனிக்கிழமை நடைபெற்றது.

விழாவுக்கு கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம் தலைமை வகித்தார். அரிமா சங்க மாவட்ட முன்னாள் ஆளுநர்கள் வி.எஸ்.தளபதி, கே.பி.குமணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி முதல்வர் எஸ்.மைதிலி வரவேற்றார்.

சென்னை முன்னாள் மேயரும், மனிதநேய அறக்கட்டளை நிறுவனருமான சைதை சா.துரைசாமி, முன்னாள் அமைச்சரும், திருச்சி காவேரி பொறியியல் கல்லூரி நிறுவனருமான நல்லுசாமி, காஞ்சிபுரம் முன்னாள் எம்எல்ஏ கே.ஜெய்பாலாஜி ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

தெள்ளாறு சுவாமி அபேதானந்தா பாலிடெக்னிக் கல்லூரி நிர்வாக இயக்குநர் டி.கே.பி.மணி, அரிமா சங்க மாவட்டத் தலைவர் டி.ராமலிங்கம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தினமணி

சனிக்கிழமை, 3 மார்ச், 2018

# கல்லூரியில் ரத்த தான முகாம்




வந்தவாசி ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற ரத்த தான முகாம்.

வந்தவாசி, மார்ச் 2: வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியின் செஞ்சுருள் சங்கம், நாட்டு நலப்பணித் திட்டம், இளம் அரிமா சங்கம், இளம் செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவை சார்பில், ரத்த தான முகாம் கல்லூரி வளாகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

முகாமுக்கு கல்லூரி முதல்வர் எஸ்.மைதிலி தலைமை வகித்தார். கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம் முகாமைத் தொடக்கி வைத்தார். செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி ரத்த வங்கி மருத்துவர்கள் சுசிந்தன், ஐஸ்வர்யா, வந்தவாசி வட்டார மருத்துவ அலுவலர் ஜி.திருமூர்த்தி ஆகியோர் தலைமையிலான குழுவினர் மாணவிகள், பேராசிரியைகள் அளித்த ரத்தத்தை தானமாகப் பெற்றனர். முகாமில் 100 யூனிட் ரத்தம் தானமாகப் பெறப்பட்டது.

இதில், கல்லூரிச் செயலர் எம்.ரமணன் மற்றும் பேராசிரியைகள் ஏ.கலைவாணி, கி.வரலட்சுமி, ரமாபிரியா, டி.துர்காதேவி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தினமணி

வியாழக்கிழமை, 1 மார்ச் 2018

# தேசிய அறிவியல் தின விழா




நிகழ்ச்சியில் பேசிய சென்னை ஈக்குவேஷன் காலிபரேஷன் சர்வீசஸ் நிறுவன முதன்மை செயல் அலுவலர் டி.சித்ரா.

வந்தவாசி, பிப்.28: வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் அனைத்து அறிவியல் துறைகள் சார்பில், தேசிய அறிவியல் தின விழா புதன்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம் தலைமை வகித்தார். கல்லூரிச் செயலர் எம்.ரமணன், கல்லூரி முதல்வர் எஸ்.மைதிலி ஆகியோர் முன்னிலை வகித்தனர். சென்னை ஈக்குவேஷன் காலிபரேஷன் சர்வீசஸ் நிறுவன முதன்மை செயல் அலுவலர் டி.சித்ரா சிறப்புரையாற்றினார்.

கல்லூரி உயிர் வேதியியல் துறைத் தலைவர் கே.பத்மலோசனா, இயற்பியல் துறைத் தலைவர் எஸ்.செல்வகுமார், வேதியியல் துறைத் தலைவர் எ.ஷோபா மற்றும் மாணவிகள் பங்கேற்றனர்.

தினகரன்

3.3.2018

அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில்

# ரத்ததான முகாம்




வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் நடந்த ரத்ததான முகாமினை கல்லூரி நிறுவனர் பா.முனிரத்தினம் தொடக்கி வைத்தார். உடன் கல்லூரி செயலாளர் எம்.ரமணன், டாக்டர்கள் ஜி.திருமூர்த்தி, ஐஸ்வரியா.

வந்தவாசி, மார்ச் 3: வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் ரத்ததான முகாம் நேற்று நடந்தது.

வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி செஞ்சுருள் சங்கம், இளம் செஞ்சுருள் சங்கம், கல்லூரி இளம் லயன்ஸ் சங்கம் மற்றும் வந்தவாசி வட்டார மருத்துவதுறை இணைந்து ரத்ததான முகாம் நேற்று கல்லூரி வளாகத்தில் நடத்தினர்.

கல்லூரி முதல்வர் எஸ்.மைதிலி தலைமை தாங்கினார். செயலாளர் எம்.ரமணன், வட்டார மருத்துவ அலுவலர் ஜி.திருமூர்த்தி, வழூர் ஆரம்ப சுகாதார நிலைய டாக்டர் பி.பிரேம் முன்னிலை வகித்தார். செங்கல்பட்டு அரசு மருத்துவ கல்லூரி ரத்த வங்கி அலுவலர் சுசிந்தன் வரவேற்றார்.

முகாமினை கல்லூரி நிறுவனர் பா.முனிரத்தினம் தொடக்கி வைத்து ரத்ததானம் செய்வதால் ஏற்படும் நன்மை குறித்தும், ரத்த தானத்தால் பல உயிர்களை காப்பாற்றப்படுவது குறித்து பேசினார்.

இதில் செங்கல்பட்டு அரசு மருத்துவ கல்லூரி ரத்தவங்கி மருத்துவர் ஐஸ்வரியா தலைமையிலான குழுவினர் 100 மாணவிகளிடம் பெறப்பட்ட ரத்தத்தை செங்கல்பட்டு ரத்தவங்கிக்கு கொண்டு சென்றனர்.

முகாமில் கல்லூரி பேராசிரியைகள் ஏ.கலைவாணி, வரலட்சுமி, ராமபிரியா, துர்காதேவி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தினத்தந்தி

1-2-2018




அகிலாண்டேஸ்வரி கல்லூரியில்

# மகளிர் நல மேம்பாட்டுத்துறை சார்பில் கல்லூரி சந்தை

வந்தவாசி, பிப்.1–

வந்தவாசி ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி கல்லூரியில் மாணவிகள், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மற்றும் மாவட்ட வழங்கல் விற்பனை சங்கம் மூலம் மகளிர் சுய உதவிக்குழுக்கள் இணைந்து தயாரித்த உற்பத்தி பொருட்களை விற்பனை செய்யும் நிகழ்ச்சி 'கல்லூரி சந்தை' பெயரில் நடந்தது. இதில் வேலூர், திருவண்ணாமலை, நாமக்கல், விழுப்புரம், திருவள்ளூர், காஞ்சீபுரம் மற்றும் ஈரோடு மாவட்ட மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்கள்' கலந்து கொண்டு 65 அரங்குகளை அமைத்து பொருட்களை விற்பனை செய்தனர்.

தொடக்க விழாவுக்கு கல்லூரி தலைவர் பி.முனிரத்தினம் தலைமை தாங்கினார். செயலாளர் எம்.ரமணன், முதல்வர் எஸ்.மைதிலி ஆகியோர் முன்னிலை வகித்தனர். துணை முதல்வர் கே.சுகுணா வரவேற்றார். சந்தையினை மாவட்ட மகளிர் திட்ட இயக்குனர் மா.ஜெயசுதா ரிப்பன் வெட்டி திறந்து வைத்து பேசினார். உதவி திட்ட அலுவலர்கள் சி.டி.நாராயணசாமி, ஜான்சன் உள்பட பலர் இதில் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை அலுவலர்கள் வி.முருகானந்தம், சிவக்குமார் ஆகியோர் செய்திருந்தனர்.



தினகரன்

21.2.2018

அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி சார்பில்

# நாட்டு நலப்பணி திட்ட முகாம்



வந்தவாசி அடுத்த மழையூர் கிராமத்தில் அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி சார்பில் நடந்த நாட்டு நலப் பணி திட்ட முகாமில் கல்லூரி முதல்வர் எஸ்.மைதிலி பேசினார். உடன் தாசில்தார் கே.ஆர்.முரளிதரன், பிடிஓ பரணிதரன், கல்லூரி செயலாளர் எம்.ரமணன்.

வந்தவாசி, பிப்.21: வந்தவாசி அடுத்த மழையூர் கிராமத்தில் நேற்று முன்தினம் அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி சார்பில் நாட்டு நலப் பணி திட்ட முகாம் நடந்தது.

ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி வளாகத்தில் நடந்த முகாமிற்கு கல்லூரி முதல்வர் எஸ்.மைதிலி தலைமை தாங்கினார். கல்லூரி செயலாளர் எம்.ரமணன் முன்னிலை வகித்தார்.

கல்லூரி நாட்டு நலப் பணி திட்ட அலுவலர் கி.வரலட்சுமி வரவேற்றார். தாசில்தார் ஆர்.முரளிதரன் கலந்துகொண்டு, முகாமை தொடங்கி வைத்து பேசினார்.

இதில் பிடிஓ பரணிதரன், வருவாய் ஆய்வாளர் ஜி.மலர், விஏஓ எஸ்.கிருபானந்தம் உட்பட பலர் கலந்துகொண்டனர். முடிவில் கல்லூரி நாட்டு நலப்பணி திட்ட அலுவலர் பாரதி நன்றி கூறினார்.

புதன்கிழமை, 21 பிப்ரவரி, 2018

தினமணி

# நாட்டு நலப் பணித் திட்ட முகாம் தொடக்கம்



மழையூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி வளாகத்தில் தூய்மைப் பணியில் ஈடுபட்ட வந்தவாசி ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி நாட்டு நலப் பணித் திட்ட மாணவிகள்.

வந்தவாசி, பிப்20: வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியின் நாட்டு நலப் பணித் திட்டம் அலகு - 1, அலகு - 2 ஆகியவை சார்பில், 7 நாள் சிறப்பு முகாம் வந்தவாசியை அடுத்த மழையூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் திங்கள்கிழமை தொடங்கியது.

நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் எஸ்.மைதிலி தலைமை வகித்தார். நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் கி.வரலட்சுமி வரவேற்றார். கல்லூரிச் செயலர் எம்.ரமணன் முகாமைத் தொடக்கி வைத்தார்.

சென்னை தொழில், வர்த்தகத் துறை உதவி இயக்குநர் கே.எம்.பாலாஜி, வந்தவாசி வட்டாட்சியர் கே.ஆர்.முரளிதரன், தெள்ளாறு வட்டார வளர்ச்சி அலுவலர் பி.பரணிதரன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். விழாவில், வருவாய் ஆய்வாளர் ஜி.மலர், கிராம நிர்வாக அலுவலர் எஸ்.கிருபானந்தம், நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் டி.பாரதி உள்ளிட்டோர் பங்கேற்றனர். இதையொட்டி, மாணவிகள் அந்தக் கிராமத்தில் நலப் பணிகளை மேற்கொண்டனர்.

தினமலர்

சனி மார்ச் 3, 2018




வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் நாட்டு நலப்பணித்திட்டம், செஞ்சுருள் கிளப், இளம் ரெட்கிராஸ் கிளப் ஆகியவை இணைந்து ரத்ததான முகாமை நடத்தியது. கல்லூரி நிறுவனர் முனிரத்தினம், செயலாளர் ரமணன், கல்லூரி முதல்வர் மைதிலி மற்றும் டாக்டர் குழுவினர் உள்ளனர்.

# கல்லூரி மாணவிகள் ரத்ததான முகாம்

வந்தவாசி, மார்ச் 3–

வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் நாட்டு நலப்பணித்திட்டம், செஞ்சுருள் கிளப், இளம் ரெட்கிராஸ் கிளப் ஆகியவைகள் இணைந்து ரத்ததான முகாம் நடத்தியது.

கல்லூரி மாணவிகளிடமிருந்து 100 யூனிட் ரத்தம் கொடுத்தனர்.

கல்லூரி நிறுவனர் முனிரத்தினம் தலைமை வகித்தார். முதல்வர் மைதிலி முன்னிலை வகித்தார்.

முகாமினை கல்லூரி செயலர் ரமணன் துவக்கி வைத்தார். செங்கல்பட்டு அரசு மருத்துவக்கல்லூரி ரத்தவங்கி டாக்டர் குழுவினர்கள் சுசிந்தன், ஐஸ்வர்யா, வழூர் ஆரம்ப சுகாதாரநிலைய மருத்துவ அலுவலர் திருமூர்த்தி, டாக்டர் பிரேமா ஆகியோர் மாணவிகளிடம் ரத்த தானம் பெற்றனர்.

மருவூர் டைம்ஸ்
04-03-2018 ஞாயிற்றுக்கிழமை




வந்தவாசியை அடுத்த மழையூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி மாணவிகள் நாட்டு நலப்பணி திட்ட முகாமில் நீர் சேமிப்பின் அவசியம் குறித்து நாடகம் நடத்திய காட்சி.

# ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி சார்பில் நாட்டு நலப் பணித் திட்ட முகாமில் நீர் சேமிப்பின் அவசியம் - நாடகம்

வந்தவாசி, பிப்.27-

வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி மாணவிகள் நாட்டு நலப்பணித் திட்ட முகாமில் நீர் சேமிப்பின் அவசியம் குறித்து நாடகம் நடத்தினர்

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி அடுத்த மழையூர் கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி சார்பில் நடைபெற்ற நாட்டு நலப் பணித் திட்ட முகர்மில் "வாழ்க்கையை கொண்டாடுவோம்!" என்ற தலைப்பில் எய்ட்ஸ் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இதில் வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனை எம்.எஸ். டபுல்யு. ஆலோசகர் கே.இராஜேந்திரன் மாணவிகளிடமும் பொது மக்களிடமும் எய்ட்ஸ் குறித்த விழிப்புணர்வு ஏற்படும் வகையில் சிறப்புரையாற்றினார். இரண்டாம் ஆண்டு ஆங்கில துறை சார்பில் நீர் சேமிப்பின் அவசியம் குறித்து நாடகம் நடத்தினர். கோதண்டபுரம் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் காசநோய் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை வந்தவாசி ஆரம்ப சுகாதார நிலைய எம்.எஸ். டபிள்யு. செந்தில்குமார் நடத்தி வைத்தார்.




வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியின் 23ம் ஆண்டு விழாவில் பல்கலைக்கழக அளவில் அதிக மார்க் பெற்ற மாணவிகளை பாராட்டி சென்னை சித்த மருத்துவர் சிவராமன் பரிசுகளை வழங்கினார். உடன் கல்லூரி நிறுவனர் முனிரத்தினம், தெள்ளாறு சுவாமி அபேதானந்தா கல்லூரி தாளாளர் மணி, அகிலாண்டேஸ்வரி கல்லூரி முதல்வர் மைதிலி, முன்னாள் முதல்வர் முகமதுயாகூப் ஆகியோர்.

# அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி 23-ம் ஆண்டு விழா

**வந்தவாசி**, மார்ச் 8

*வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியின் 23ம் ஆண்டு விழா நடந்தது.*

கல்லூரி நிறுவனர் முனிரத்தினம் தலைமை வகித்தார். தெள்ளாறு சுவாமி அபேதானந்தா பாலிடெக்னிக் கல்லூரி தாளாளர் டிகேபி.மணி முன்னிலை வகித்தார். துணை முதல்வர் சுகுணா வரவேற்றார். முதல்வர் மைதிலி ஆண்டறிக்கை வாசித்தார்.

விழாவில் சென்னை சித்த மருத்துவர் டாக்டர் சிவராமன் பங்கேற்று, சித்த மருத்துவத்தின் குணங்களைப் பற்றிப்பேசினார்.

இதையடுத்து மாணவிகள் 100 சதவீதம் தேர்ச்சி அளித்த பேராசிரியர்களையும், அனைத்து பாடப்பிரிவுகளிலும் பல்கலைக்கழக அளவில் தேர்ச்சி பெற்ற மாணவிகளை பாராட்டி பரிசுகளை வழங்கினார்.

நிகழ்ச்சிகளில் திருவள்ளுவர் பல்கலைக்கழக ஆட்சி மன்றக்குழு உறுப்பினர் ரமணன், முன்னாள் முதல்வர் முகமதுயாகூப், அரிமா சங்க சரவணன் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர். இயற்பியல் துறைத்தலைவர் செல்வகுமார் நன்றி கூறினார்.

தினமலர்

வியாழன் மார்ச் 8, 2018

தினத்தந்தி

8-3-2018

# ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி

(Re-Accredited 'A' Grade By NAAC) - (Recognised under Section 2(f) 12 (B) of UGC Act.)

(Permanent Affiliation Granted by Thiruvalluvar University-Vellore)

திண்டிவனம் சாலை, வந்தவாசி - 604 408.

## உலக மகளிர் தினவிழா-2018

நாள்: 08-03-2018 வியாழக்கிழமை நேரம்: காலை 11.00 மணி

இடம்: கல்லூரி அரங்கம்



சிறப்பு விருந்தினர்

முனைவர். **M.வளர்மதி** M.Sc., B.Ed., M.Phil., Ph.D.,

கல்லூரி கல்வி இணை இயக்குநர்,

வேலூர்.

அனைவரும் வருக! வருக!!

நிறுவனர், செயலர், முதல்வர், பேராசிரியர்கள்,

ஆசிரியரல்லாப் பணியாளர்கள் மற்றும் மாணவிகள்.

சுவாமி அபேதானந்தா கல்வி அறக்கட்டளை, வந்தவாசி.

# புதிய உறுப்பினர்களுக்கு நினைவுப் பரிசு




திருவள்ளுவர் பல்கலைக்கழக வளர்ச்சிக் கழகம் சார்பில் புதிய ஆட்சி மன்ற மற்றும் கல்விக் குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி நிறுவனரும், திருவள்ளுவர் பல்கலைக் கழகத்தின் வளர்ச்சி குழுத் தலைவருமான பி.முனிரத்தினம், செயலாளர் ராஜேந்திரன், பொருளாளர் செந்தில்குமார் ஆகியோர் புதிய உறுப்பினர்கள் மற்றும் சிண்டிகேட் உறுப்பினர் எம்.ரமணன் ஆகியோருக்கு நினைவுப் பரிசு வழங்கிய காட்சி.

தினகரன்

8.3.2018

வந்தவாசி அகிலாண்டேஸ்வரி

# மகளிர் கல்லூரி தினவிழாவில் மாணவிகளுக்கு பரிசு




வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் நடந்த விழாவில் சென்னை சித்த மருத்துவர் ஜி.சிவராமன் மாணவிகளுக்கு பரிசு வழங்கினார். உடன் கல்லூரி நிறுவனர் பா.முனிரத்தினம், டி.கே.பி.மணி, கல்லூரி முதல்வர் எஸ்.மைதிலி.

வந்தவாசி, மார்ச் 8: வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி தினவிழாவில், சென்னை சித்த மருத்துவர் ஜி.சிவராமன், மாணவிகளுக்கு பரிசு வழங்கினார்.

வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் நேற்று 23ம் ஆண்டு கல்லூரி தினவிழா கொண்டாடப்பட்டது.

கல்லூரி நிறுவனர் பா.முனிரத்தினம் தலைமை தாங்கினார். கல்லூரி செயலாளரும், திருவள்ளுவர் பல்கலைக் கழக ஆட்சி மன்ற குழு உறுப்பினரும்மான எம்.ரமணன், கல்லூரி முதல்வர் எஸ்.மைதிலி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி துணை முதல்வர் கே.சுகுணா வரவேற்றார்.

இதில், சென்னை சித்த மருத்துவர் ஜி.சிவராமன், பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரி அளவில் முதல் 40 இடங்களை பிடித்த மாணவிகளுக்கும், தேர்ச்சி விகிதம் அளித்த பேராசிரியைகளுக்கும் பரிசுகளை வழங்கி பேசினார்.

இதில் தெள்ளார் சுவாமி அபேதானந்தா பாலிடெக்னிக் கல்லூரி நிர்வாக இயக்குனர் டி.கே.பி.மணி, கல்லூரி முன்னாள் முதல்வர் எஸ்.முகமது யாகூப், லயன்ஸ் சங்க மாவட்ட தலைவர் ஆர்.சரவணன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

முடிவில் கல்லூரி இயற்பியல்துறை தலைவர் செல்வகுமார் நன்றி கூறினார்.

தினத்தந்தி

8-3-2018




வந்தவாசி

# அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி ஆண்டு விழா

வந்தவாசி, மார்ச்.8–

வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியின் 23–ம் ஆண்டு விழா கல்லூரி அரங்கில் நடந்தது. விழாவுக்கு கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம் தலைமை தாங்கினார். கல்லூரி செயலாளரும், திருவள்ளுவர் பல்கலைக்கழக ஆட்சி மன்றக்குழு உறுப்பினருமான எம்.ரமணன், தெள்ளார் சுவாமி அபேதானந்தா பாலிடெக்னிக் கல்லூரி தாளாளர் டி.கே.பி.மணி, கல்லூரி முன்னாள் முதல்வர் முகம்மதுயாகூப், அரிமா சங்க மாவட்ட தலைவர் ஆர்.சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி துணை முதல்வர் கே.சுகுணா வரவேற்றார். கல்லூரி முதல்வர் எஸ்.மைதிலி ஆண்டு அறிக்கை வாசித்தார்.

விழாவில் சிறப்பு அழைப்பாளராக பேச்சாளரும், சித்த மருத்துவருமான டாக்டர் ஜி.சிவராமன் கலந்துகொண்டு, 100 சதவீத தேர்ச்சி அளித்த பேராசிரியர்களுக்கும், இளநிலை மற்றும் முதுநிலை பாடப்பிரிவுகளில் முதல் இடம் பெற்ற 40 மாணவிகளுக்கும் பரிசுகளை வழங்கினார். முடிவில் இயற்பியல் துறைத் தலைவர் செல்வகுமார் நன்றி கூறினார்.

இன்று (வியாழக்கிழமை) கல்லூரி அரங்கில் மகளிர் தின விழா நடக்கிறது. விழாவில் வேலூர் மண்டல கல்லூரி கல்வி இணை இயக்குனர் எம்.வளர்மதி கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

தினமணி

வியாழக்கிழமை, 8 மார்ச் 2018

# கல்லூரி தின விழா




விழாவில் பேசிய சித்த மருத்துவர் ஜி.சிவராமன்.

வந்தவாசி, மார்ச் 7: வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் 23-ஆம் ஆண்டு கல்லூரி தின விழா புதன்கிழமை நடைபெற்றது.

விழாவுக்கு கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம் தலைமை வகித்தார். கல்லூரி துணை முதல்வர் கே.சுகுணா வரவேற்றார். கல்லூரி முதல்வர் எஸ்.மைதிலி ஆண்டறிக்கை வாசித்தார்.

சென்னை சித்த மருத்துவர் ஜி.சிவராமன் சிறப்புரை ஆற்றினார். சித்த மருத்துவத்தின் பயன்கள், பழங்களில் உள்ள நோய் எதிர்ப்பு தன்மைகள் உள்ளிட்டவை குறித்து அவர் விளக்கிக் கூறினார். மேலும், கடந்த தேர்வில் 100 சதவீத தேர்ச்சி அளித்த பேராசிரியைகளுக்கும், சிறப்பிடம் பெற்ற மாணவிகளுக்கும் அவர் பரிசுகளை வழங்கினார்.

தெள்ளாறு சுவாமி அபேதானந்தா பாலிடெக்னிக் கல்லூரி நிர்வாக இயக்குநர் டி.கே.பி.மணி, ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரிச் செயலர் எம்.ரமணன், கல்லூரி முன்னாள் முதல்வர் முகமது யாகூப், அரிமா சங்க மாவட்டத் தலைவர் ஆர்.சரவணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். கல்லூரி இயற்பியல் துறைத் தலைவர் செல்வகுமார் நன்றி கூறினார்.

தினகரன்

9.3.2018

அகிலாண்டேஸ்வரி கல்லூரியில் மகளிர் தினவிழா

# மாணவிகள் தற்காப்பு கலை கற்றுக்கொள்ள வேண்டும்

## கல்வி மண்டல இணை இயக்குனர் பேச்சு




▶ வந்தவாசி அகிலாண்டேஸ்வரி கல்லூரியில் நடந்த மகளிர் தினவிழாவில் கல்லூரி கல்வி வேலூர் மண்டல இணை இயக்குனர் எம்.வளர்மதி மாணவிகளுக்கு பரிசு வழங்கினார். உடன், பல்கலைக்கழக ஆட்சிமன்ற குழு உறுப்பினர் எம்.ரமணன், கல்லூரி முதல்வர் எஸ்.மைதிலி.

**வந்தவாசி, மார்ச் 9:** வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் மகளிர் தினவிழா நேற்று நடந்தது. கல்லூரி நிறுவனர் பா.முனிரத்தினம் தலைமை தாங்கினார். செயலாளரும், திருவள்ளுவர் பல்கலைக்கழக ஆட்சிமன்ற குழு உறுப்பினருமான எம்.ரமணன், கல்லூரி முதல்வர் ...றார்.

இதில், கல்லூரி கல்வி வேலூர் மண்டல இணை இயக்குனர் எம்.வளர்மதி கலந்துகொண்டு, கல்லூரி அளவில் பல்வேறு நிலைகளில் முதலிடம் பிடித்த மாணவிகளுக்கும், கலை நிகழ்ச்சி நடத்திய குழு மாணவிகளுக்கும் பரிசு வழங்கி பேசியதாவது:

பெற்றோர்களையும், ஆசிரியர்களையும் என்றும் மறக்கக்கூடாது.

கல்வி இருந்தால் தான் எதிலும் சிறக்க முடியும். நாம் கல்பனா சாவ்லாவை பற்றி பேசுவதற்கு கல்வி தான் காரணம், கல்வி இருந்ததால் தான் தன்னம்பிக்கை பிறக்கும். தன்னம்பிக்கை இருந்தால் தான் சாதிக்க முடியும். சாதிக்க முடிந்தால் தான் அனைவருக்கும் முன் உதாரணமாக திகழ முடியும். இன்றுள்ள சூழ்நிலையில் மாணவிகளாகிய நீங்கள் தற்காப்பு கலை கற்றுக்கொள்ள வேண்டும்.

வெற்றி என்னும் சிகரத்தை பறந்தாவது அல்லது ஓடியாவது, நடந்தாவது, தவழ்ந்தாவது பற்றிக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

இதில் கல்வியியல் கல்லூரி முதல்வர் சண்முகம், லயன்ஸ் சங்க மாவட்ட தலைவர் ஆர்.சரவணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

முடிவில் கல்லூரி ...

தினமணி

வெள்ளிக்கிழமை, 9 மார்ச் 2018

**வந்தவாசி:** வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் உலக மகளிர் தின விழா நடைபெற்றது. விழாவுக்கு கல்லூரி முதல்வர் எஸ்.மைதிலி தலைமை வகித்தார். கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம், கல்லூரிச் செயலர் எம்.ரமணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வேலூர் மண்டல கல்லூரி கல்வி இணை இயக்குநர் எம்.வளர்மதி சிறப்புரை ஆற்றினார். மேலும், கலை நிகழ்ச்சியில் பங்கேற்ற மாணவிகளுக்கு அவர் பரிசுகளை வழங்கினார்.

கல்லூரி துணை முதல்வர் கே.சுகுணா, கல்லூரி கணினி பயன்பாட்டியல் துறைத் தலைவர் எஸ்.சத்தியகலா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



தமிழ் சுடர்

சனிக்கிழமை, மார்ச் 10, 2018




வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற கலாச்சார தின விழாவில் மாணவிகளுக்கு சான்றிதழ் மற்றும் சிறப்பு பரிசுகளை கல்லூரியின் நிறுவனர் பி.முனிரத்தினம் வழங்கினார். உடன் கல்லூரி முதல்வர் மைதிலி ரோட்டரி சங்க மாவட்ட தலைவர் சரவணன் ஆகியோர் உள்ளனர்.

தினமலர்

வெள்ளி மார்ச் 9, 2018

# அகிலாண்டேஸ்வரி கல்லூரியில் மகளிர் தின விழா

வந்தவாசி, மார்ச் 9–

வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியின் சார்பில் கல்லூரி வளாகத்தில் சர்வதேச பெண்கள் தினவிழா கொண்டாடப்பட்டது.

கல்லூரி நிறுவனர் முனிரத்தினம் தலைமை வகித்தார். திருவள்ளுவர் பல்கலைக்கழக ஆட்சி மன்றக்குழு உறுப்பினர் ரமணன், கல்லூரி முதல்வர் மைதிலி ஆகியோர் முன்னிலை வகித்தனர். துணை முதல்வர் சுகுணா வரவேற்றார்.

விழாவில் வேலூர் மண்டல கல்லூரிக்கல்வி இணை இயக்குனர் வளர்மதி பங்கேற்று மகளிர் தினம் குறித்துப் பேசியதாவது;

மகளிர் தினம் கொண்டாடப்படுவதற்கான காரணம் பெண்கள் பெற்றுள்ள பெரும் ஆற்றல் அடைவதற்கு கல்வி பெறுவதின் அவசியத்தை உணரவும், சங்க காலம் முதல் தற்காலம் வரையில் முதன்மை பெற்று திகழ்ந்து வந்த பெண்களின் சிறப்புகளை அறிவதும்தான். ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னாலும் பெண்ணின் பங்களிப்பு உள்ளது. குடும்பத்தில் பெண்களின் உழைப்பும் பங்களிப்பும் மிகவும் இன்றியமையாதவை

இவ்வாறு அவர் பேசினார்.

கல்லூரியில் பல்வேறு பிரிவுகளில் வெற்றி பெற்று சிறப்பித்த மாணவிகளைப் பாராட்டி பரிசுகளையும் வழங்கினார். விழாவில் கல்லூரி பேராசிரியர்கள், மாணவிகள், அரிமா கிளப் சரவணன் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர். கம்ப்யூட்டர் பயன்பாட்டியல் துறை தலைவர் சத்தியகலா நன்றி கூறினார்.




வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் நடந்த உலக மகளிர் தின விழாவில் வேலூர் மண்டல கல்லூரிக்கல்வி இணை இயக்குனர் வளர்மதி பங்கேற்று மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கினார். திருவள்ளுவர் பல்கலைக்கழக ஆட்சிமன்றக் குழு உறுப்பினர் ரமணன், கல்லூரி முதல்வர் மைதிலி மற்றும் மாணவிகள்.

மாலை முரசு

08–03–2018



வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற 23–ம் ஆண்டு கல்லூரி தின விழாவில் சென்னை சித்த மருத்துவரும் பேச்சாளருமான மருத்துவர் சிவராமன் மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கிய போது எடுத்த படம். அருகில் கல்லூரி நிறுவனர் முனிரத்தினம், முதல்வர் மைதிலி மற்றும் பலர் உள்ளனர்.

தமிழ் சுடர்

வெள்ளிக்கிழமை, மார்ச் 9, 2018




வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிா கல்லூரியில் உலக மகளிர் தின விழாவில் மாணவிகளுக்கு சான்றிதழ் மற்றும் சிறப்பு பரிசுளை கல்லூரி கல்வி இணை இயக்குனர் ஆர்.வளர்மதி வழங்கினார். உடன் கல்லூரியின் நிறுவனர் பி.முனிரத்தினம், திருவள்ளுவர் பல்கலை கழக சிண்டிகேட் உறுப்பினரும் கல்லூரி செயலர் மு.ரமணன், கல்லூரி முதல்வர் மைதிலி ஆகியோர் உள்ளனர்.

27-3-2018




வந்தவாசி

# அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் பட்டமளிப்பு விழா

வந்தவாசி, மார்ச்.27-

வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் 19-வது பட்டமளிப்பு.விழா கல்லூரி அரங்கில் நடந்தது. விழாவுக்கு கல்லூரி தலைவர் பி.முனிரத்தினம் தலைமை தாங்கினார். கல்லூரி செயலாளர் எம்.ரமணன் முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் எஸ்.மைதிலி வரவேற்றார்.

விழாவில் சிறப்பு விருந்தினராக துணை போலீஸ் சூப்பிரண்டு ஏ.கலியமூர்த்தி கலந்துகொண்டு இளநிலை பாடப்பிரிவில் 705 மாணவிகளுக்கும், முதுநிலை பிரிவில் 97 மாணவிகளுக்கும் பட்டம் வழங்கினார். இதில் கல்லூரி துணை முதல்வர் கே.சுகுணா மற்றும் துறை தலைவர்கள், பேராசிரியர்கள், தெள்ளார் சுவாமி அபேதானந்தா பாலிடெக்னிக் நிர்வாக இயக்குனர் டி.கே.பி.மணி, அரிமா சங்க முன்னாள் ஆளுனர் வி.எஸ்.தளபதி உள்பட பலர் கலந்துகொண்டனர்.

தினகரன்

27.03.2018

அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி பட்டமளிப்பு விழா

# உலகம் திரும்பி பார்க்கும் வகையில் உயர்ந்த சிந்தனையுடன் வாழ வேண்டும்

## போலீஸ் அதிகாரி பேச்சு

வந்தவாசி, மார்ச் 27: உலகம் உங்களை திரும்பி பார்க்கும் வகையில் உயர்ந்த சிந்தனையுடன் வாழ வேண்டும் என வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி பட்டமளிப்பு விழாவில் ஓய்வுபெற்ற எஸ்பி ஏ.கலியமூர்த்தி பேசினார்.



▶ வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் நடந்த விழாவில் ஓய்வு பெற்ற எஸ்பி ஏ.கலியமூர்த்தி மாணவிகளுக்கு பட்டம் வழங்கினார். உடன் திருவள்ளுவர் பல்கலைக்கழக ஆட்சி மன்ற உறுப்பினர் எம்.ரமணன், கல்லூரி முதல்வர் எஸ்.மைதிலி.

வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் நேற்று 19வது பட்டமளிப்பு நடந்தது. கல்லூரி நிறுவனர் பா.முனிரத்தினம் தலைமை தாங்கினார். கல்லூரி செயலாளரும், திருவள்ளுவர் பல்கலைக்கழக ஆட்சி மன்ற குழு உறுப்பினருமான எம்.ரமணன் முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் எஸ். மைதிலி வரவேற்றார். இதில் ஓய்வு பெற்ற எஸ்பி ஏ.கலியமூர்த்தி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, பல்கலைக்கழக அளவில் பதக்கம் பெற்ற 2 மாணவிகள் உட்பட 802 மாணவிகளுக்கு பட்டம் வழங்கினார்.

அப்போது அவர் பேசியதாவது:காட்டை அழிக்க ஒரு தீப்பொறி போதும். அதேபோல், அரங்கம் முழுவதும் பட்டதாரிகள் அமர்ந்து உள்ளீர்கள். இதில் ஒருவர் போதும் நாட்டை ஆள்வதற்கு. எண்ணம் போல்தான் வாழ்க்கை அமைகின்றது. எனவே, சிந்தனை, சொல், செயல் என அனைத்திலும் கவனம் வையுங்கள். அதுதான் உங்கள் வாழ்க்கையை மாற்றும். பெண்கள் சாதிக்க பிறந்தவர்கள். பட்டம் பெற்றுள்ள நீங்கள் பட்டம் பெற்றோம் என்று நின்று விடாமல் தொடர்ந்து படித்து சாதிக்க வேண்டும். இந்த உலகம் உங்களை திரும்பி பார்க்கும் வகையில் உயர்ந்த சிந்தனையுடன் நடந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

இதில் தெள்ளார் சுவாமி அபேதானந்தா பாலிடெக்னிக் கல்லூரி நிர்வாக இயக்குனர் டி.கே.பி.மணி, லயன்ஸ் சங்க மாவட்ட முன்னாள் ஆளுனர் எஸ். தளபதி, மாவட்ட தலைவர் ஆர்.சரவணன் உட்பட பலர் கலந்துகொண்டனர். முடிவில் கல்லூரி துணை முதல்வர் கே.சுகுணா நன்றி கூறினார்.

தினமலர் 27/03/18

# முயற்சிக்கு தயக்கமும், வெற்றிக்கு மயக்கமும் கூடாது

## மாணவிகளுக்கு முன்னாள் எஸ்பி அறிவுரை

வந்தவாசி, மார்ச். 27

வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லுாரியில் 19வது பட்டமளிப்பு விழா கல்லுாரி வளாகத்தில் நடந்தது.

கல்லுாரி நிறுவனர் முனிரத்தினம் தலைமை வகித்தார். திருவள்ளுவர் பல்கலைக்கழக சிண்டிகேட் உறுப்பினர் ரமணன், தெள்ளாறு சுவாமி அபேதானந்தா கல்லுாரி தாளாளர் மணி, அரிமா கிளப் முன்னாள் கவர்னர் தளபதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.



வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லுாரியில் நடந்த 19வது பட்டமளிப்பு விழாவில் முன்னாள் எஸ்பி கலியமூர்த்தி, திருவள்ளுவர் பல்கலைக்கழக அளவில் வெற்றி பெற்ற மாணவிக்கு தங்கப்பதக்கமும், பட்டங்களையும் வழங்கினார். உடன் பல்கலைக்கழக சிண்டிகேட் உறுப்பினர் ரமணன், முதல்வர் மைதிலி மற்றும் பட்டம் பெறும் மாணவிகள்.

கல்லுாரி முதல்வர் மைதிலி வரவேற்றார். விழாவில் முதுகலையில் 97 மாணவிகள், இளங்கலையில் 705 மாணவிகள் என மொத்தம் 802 பேருக்கு பட்டங்களை முன்னாள் எஸ்பி கலியமூர்த்தி வழங்கி பேசியதாவது;

'படிக்கும் காலத்தில் முன்னே கசக்கும், பின்னே இனிக்கும்'. படிக்கவில்லையெனில் வாழ்க்கை முழுவதும் துன்பத்தை கொடுக்கும். பெற்ற தாய் பசியோடு இருந்தாலும்கூட, தவறான செயல்களை செய்யக்கூடாது: ஒழுக்கத்துடன் செய்கின்ற செயல் மட்டுமே நிலைக்கும். ஒழுக்கத்தை விட உயர்ந்த சொத்து உலகத்தில் எதுவுமே கிடையாது. உழைப்பின் துணையுடன் வாழக்கற்றுக் கொள்ள வேண்டும். உழைப்பில்லாத செல்வம், ஒழுக்கம் இல்லாத கல்வி, மனிதநேயமற்ற அறிவியல் வளர்ச்சி, கொள்கையில்லா அரசியல், இவை அனைத்துமே நிலையில்லாதது.

இன்றைய காலகட்டத்தில் பல்வேறு விபரீத சம்பவங்கள் நிகழ்ந்துள்ளது. இனி அப்படி நிகழக்கூடாது என்பதற்காகவே கூற விரும்புகிறேன். இதற்கு காரணம் செல்போன் மூலம் ஆசை வார்த்தைகளை நம்பி ஏமாந்த மாணவிகள் குடும்பம், போலீஸ் ஸ்டேஷன், கோர்ட் இவைகளின் படிக்கட்டுகளை ஏறி, இறங்குகின்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் மனதை சிறிதும் தளரவிடாமல் படிப்பை தொடர்ந்து விழிப்புண ர்வோடு படித்து சாதிக்க வேண்டும். செல்போன் வைத்துக்கொண்டு படுக்கைக்கு கீழே லைட் எரிகிறது என்றால், அது பெற்றோரையும் மீறி சீரழியும் நிலைக்கு செல்கிறது என்று புரிந்து, அதிலிருந்து மீட்க வேண்டும்.

மாணவிகளாகிய நீங்கள் என்னவாக வேண்டும் என்று நினைக்கிறீர்களோ, அப்படியே ஆகிவிட முடியும். சிந்தனையை சீர்படுத்தி க்கொண்டு எண்ணங்களில் கவனம் வையுங்கள். படித்து பட்டம் பெற்று விட்டோம் என்றில்லாமல் மேலும் மேலும் படிக்க வேண்டும். நான் படிக்கின்ற காலத்தில் எஸ்பி அலுவலகத்தை பார்த்து, பார்த்துச் செல்வேன். பிற்காலத்தில் அதே அலுவலகத்தில் எஸ்.பி.பதவியை வகித்தேன்.

பெற்றோரை ஒருநாளும் மறக்க வேண்டாம். அவர்கள்தான் இந்த உலகிற்கு அறிமுகம் செய்தவர்கள். தெய்வம் ஒவ்வொரு வீட்டிலும் தரிசனம் தரமுடியாது என்றுதான் வீட்டுக்கு வீடு தாயைப் படைத்துள்ளான். பெற்றோர் வழங்கிய பிச்சையால்தான் நாம் மனிதர்களாக உள்ளோம். பாலுாட்டி வளர்த்த தாய், தந்தையை பழிக்கக்கூடாது. பெற்றோரும் குழந்தைகள் பட்டம் பெற்று விட்டனர் என்றில்லாமல் மேலும் படிக்கச் செய்யுங்கள்.

கல்விதான் ஏழைகளுக்கு செல்வம். உங்களது திறமை எப்படிப்பட்டது என்று வெற்றி பெறுகின்றபோது தான் தெரியும். முயற்சிக்கு தயக்கமும், வெற்றிக்கு மயக்கமும் இருக்கக்கூடாது. இவ்வாறு அவர் பேசினார்.

✓ தினமணி 27/03/18

# கல்விதான் பெண்களுக்கான பாதுகாப்பு

வந்தவாசி, மார்ச் 26: கல்விதான் பெண்களுக்கான பாதுகாப்பு என்று முன்னாள் காவல் கண்காணிப்பாளர் எ.கலியமூர்த்தி கூறினார்.

வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியின் 19-ஆவது பட்டமளிப்பு விழா திங்கள்கிழமை நடைபெற்றது.

விழாவுக்கு கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம் தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற முன்னாள் காவல் கண்காணிப்பாளர் எ.கலியமூர்த்தி மாணவிகளுக்குப் பட்டங்களை வழங்கிப் பேசினார். அவர் பேசியதாவது:

பட்டம் பெற்றுச் செல்லும் நீங்கள் உங்கள் சிந்தனை, செயல்களில் அதிக கவனம் செலுத்த வேண்டும். பெண்கள் கல்வி கற்றால் வீட்டுக்கு மட்டுமல்ல; நாட்டுக்கும் நல்லதாகும். இதனால் வீடும் - நாடும் உயரும்.

எனவே, பெண்கள் பட்டம் பெற்றதுடன் நின்றுவிடாமல், மேலும் தொடர்ந்து படிக்க வேண்டும். அறிவை வளர்த்துக் கொள்வதில் தொடர்ந்து ஆர்வம் காட்ட வேண்டும்.

உலகிலேயே இந்திய பெற்றோர்கள்தான் அன்பில் சிறந்தவர்கள். எனவே நீங்கள் உங்கள் பெற்றோரின் அருமையை உணர்ந்து செயல்பட வேண்டும் என்றார் அவர்.

விழாவில் 802 மாணவிகளுக்கு அவர் பட்டங்களை வழங்கினார். தெள்ளாறு சுவாமி அபேதானந்தா பாலிடெக்னிக் கல்லூரி நிர்வாக இயக்குநர் டி.கே.பி.மணி, அரிமா சங்கத்தின் மாவட்ட முன்னாள் ஆளுநர் வி.எஸ்.தளபதி, ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரிச் செயலர் எம்.ரமணன், கல்லூரி முதல்வர் எஸ்.மைதிலி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**முன்னாள் காவல் கண்காணிப்பாளர்**



வந்தவாசி ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் மாணவிக்கு பட்டம் வழங்கிய முன்னாள் காவல் கண்காணிப்பாளர் எ.கலியமூர்த்தி.

மாலை முரசு

24–03–2018




வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற வேலை வாய்ப்பு பயிற்சி முகாமில் திருப்பெரும்புத்தூர் மனித மேலாண்மை புளூ ஓஷன்பர்சனல் மற்றும் அலைடு சர்வீஸ் நிறுவன அதிகாரிகள் சரவணகுமார், ராம்கி ஆகியோர் கலந்து கொண்டு மாணவிகளுக்கு பணிநியமன ஆணையை வழங்கிய காட்சி. அருகில் கல்லூரி முதல்வர் மைதிலி, செயலாளர் ரமணன் மற்றும் பலர் உள்ளனர்.

## வந்தவாசி

# கல்லூரி மாணவிகளுக்கு பணி நியமன ஆணை!

வந்தவாசி, மார்ச்.24—

வந்தவாசி ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற வளாக வேலை வாய்ப்பு நேர்காணலில் தேர்வு பெற்ற மாணவிகளுக்குபணிநியமனஆணைகள் வழங்கப்பட்டன. திருப்பெரும்புதூர் புளூஓஷன் பர்சனல் மற்றும் அலைடு சர்வீசஸ் நிறுவனம் சார்பில் இந்தக் கல்லூரியில் வளாக வேலை வாய்ப்பு நேர்காணல் நடைபெற்றது. இதில், கல்லூரியில் இளநிலை இறுதியாண்டு பயிலும் 300 மாணவிகள் பங்கேற்றனர். இவர்களில் 210 பேர் வேலைக்கு தேர்வு செய்யப்பட்டனர்.

இந்த நிலையில், வேலைக்கு தேர்வு செய்யப்பட்ட மாணவிகளுக்கு பணி நியமன ஆணைகளை அந்த நிறுவன அதிகாரிகள் வி.சரவணகுமார்,

கே.ராம்கி ஆகியோர் வழங்கினர். நிகழ்ச்சியில் கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம், செயலர் எம்.ரமணன், முதல்வர் எஸ்.மைதிலி, துணை முதல்வர் கே.சுகுணா, கல்லூரி வேலைவாய்ப்புத் துறை அலுவலர் கோ.சரோஜினி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

26.03.2018

மீடியா செய்தி

# ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி

(Re – Accredited with 'A' Grade By NAAC)
(Recognised under Section 2(f) & 12(B) of UGC Act)
(Permanent Affiliation Granted by Thiruvalluvar University)
திண்டிவனம் சாலை, வந்தவாசி, 604 408



## 19 - வது பட்டமளிப்பு விழா

நாள் : 26.03.2018 திங்கட்கிழமை
நேரம் : காலை 10.00 மணி
இடம் : கல்லூரி அரங்கம்

அவ்வமையம்

**திரு.A.கலியமூர்த்தி,IPS**

முன்னாள் காவல் கண்காணிப்பாளர்,

அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு பட்டச் சான்றிதழ்களை வழங்கி பட்டமளிப்பு சிறப்புரை நிகழ்த்த அன்புடன் இசைந்துள்ளார்கள்.

## அனைவரும் வருக! வருக!!

**Ln.திரு.B.முனிரத்தினம்**
நிறுவனர்
ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி, வந்தவாசி

**Ln.திரு.M.ரமணன்**,B.E.,
செயலர்
ஆட்சிமன்றக்குழு உறுப்பினர்
திருவள்ளுவர் பல்கலைக்கழகம்,
வேலூர்

**Dr.S.மைதிலி**, M.com.,M.phil.,Ph.D.,
முதல்வர்

## சுவாமி அபேதானந்தா கல்வி அறக்கட்டளை, வந்தவாசி.

குறிப்பு: 2016ஆம் ஆண்டில் தேர்ச்சிபெற்ற இளநிலை மற்றும் முதுநிலை மாணவிகள் அனைவரும் பட்டமளிப்பு விழாவினை முன்னிட்டு பதிவுசெய்து கொள்வதற்காக காலை 9.30 மணிக்குள் கல்லூரியில் இருத்தல் வேண்டும்.


19
-வது
விழா
நாள்: 26.03.2018, நேரம்:காலை 11.00, இடம்:கல்லூரி அரங்கம்
உயர்திரு. A.கலியமூர்த்தி IPS., அவர்கள்
(முன்னாள் காவல் கண்காணிப்பாளர்)
சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு பட்டச் சான்றிதழ்களை வழங்கி
பட்டமளிப்பு விழா பேருரையாற்ற உள்ளார் அனைவரும் வருக ! வருக !!
இங்ஙனம்
Lion திரு. B.முனிரத்தினம்
நிறுவனர், ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி,
வந்தவாசி.
Lion திரு. M.ரமணன் B.E.,
செயலர்,
ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி, வந்தவாசி.
ஆட்சிமன்றக்குழு உறுப்பினர், திருவள்ளுவர்
பல்கலைக்கழகம், வேலூர்.
முனைவர். S.மைதிலி
முதல்வர்,
ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி,
வந்தவாசி.
வாழ்த்துகிறோம்.....
2016 - ஆம் கல்வியாண்டில் நடைபெற்ற திருவள்ளுவர் பல்கலைக்கழக தேர்வில்
(UG & PG) பல்கலைக்கழக அளவில் வெவ்வேறு பாடப்பிரிவுகளில் முதல் பத்து
இடங்களை (Ranks) பெற்ற நமது கல்லூரியைச் சார்ந்த 22 மாணவிகளை வாழ்த்துகிறோம்.
University First Rank Holders
Selvi.R.GAYATHRI DEVI (B.Sc., Biochemistry) &
Selvi.D.DEVIPRIYA (M.S.c., Mathematics)
were receiving their Degrees from the Governor of Tamil Nadu.
Selvi.I.UMA M.Sc.. Biochemistry.2ndRank
Selvi.K.VEDHAPRIYA B.Sc..Physics2ndRank
Selvi.S.UTHAYABARANI M.Sc..Applied Microbiology 3rd Rank
Selvi.P.PREMA M.Sc.Biochemistry 3rdRank
Selvi.M.PONMOZHI BCA 3rd Rank
Selvi.V.NIVETHA B.Sc.. Physics 3rd Rank
Selvi.J.SANDHIYA M.Sc..Applied Microbiology 4th Rank
Selvi.S.CHINTHAMANI M.Sc.. Physics 4th Rank
Selvi.S.SUGANYA M.Sc..Biochemistry 4th Rank
Selvi.M.CHITRADEVI B.Sc.. Physics 4th Rank
Selvi.B.DHIVYA M.Sc.. Biochemistry 5th Rank
Selvi.R.ASHWINI B.Sc.. Microbiology 5th Rank
Selvi.C.VISHALI B.Sc.. Chemistry 5th Rank
Selvi.P.ESWARI B.Sc.. Biochemistry 6th Rank
Selvi.S.Divya BCA 6th Rank
Selvi.B.KIRUTHIKA B.Sc.. Microbiology 6th Rank
Selvi.B.ARCHANA B.ARCHANA 6th Rank
Selvi.S.RAJALAKSHMI B.Sc..Microbiology 8th Rank
Selvi.R.SATHIYAVANI M.Sc.. Mathematics 9th Rank
Selvi.V.DHIVYA
10th Rank

திங்கள்கிழமை, மார்ச் 26, 2018

தமிழ் சுடர்

# ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி



(Re-Accredited with 'A' Grade by NAAC) (Recognised under Section2(f) 12(B) of UGC Act)
( Permanent Affiliation Granted by Thiruvalluvar University-Vellore)

திண்டிவனம் சாலை, வந்தவாசி – 604 408

## 19வது பட்டமளிப்பு விழா

நாள் : 26.03.2018 திங்கட்கிழமை

நேரம் : காலை 10.00 மணி

இடம் : கல்லூரி அரங்கம்

*அவ்வமையம்*



திரு. **A.கலியமூர்த்தி** I.P.S.,

முன்னாள் காவல் கண்காணிப்பாளர்

அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பட்டச்சான்றிதழ்களை வழங்கி பட்டமளிப்பு சிறப்புரை நிகழ்த்த அன்புடன் இசைந்துள்ளார்கள்.

*அனைவரும் வருக! வருக!!*

Ln.திரு. **B.முனிரத்தினம்**

நிறுவனர்– ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி, வந்தவாசி

Ln.திரு. **M.ரமணன்** B.E.,
கல்லூரி செயலர், ஆட்சிமன்றக்குழு உறுப்பினர்,
திருவள்ளுர் பல்கலைக் கழகம், வேலூர்.

Dr. **S.மைதிலி** M.Com.,M.Phil., Ph.D.,
கல்லூரி முதல்வர்

## சுவாமி அபேதானந்தா கல்வி அறக்கட்டளை, வந்தவாசி.

குறிப்பு : 2016–ஆம் ஆண்டில் தேர்ச்சி பெற்ற இளநிலை மற்றும் முதுநிலை மாணவிகள் அனைவரும் பட்டமளிப்பு விழாவினை முன்னிட்டு பதிவு செய்து கொள்வதற்காக காலை 9.00 மணிக்குள் கல்லூரியில் இருக்க வேண்டும்.

மாலை முரசு

25-03-2018




வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற முத்தமிழ் விழாவில் தமிழ்கடல் நெல்லை கண்ணன் கலந்து கொண்டு மாணவிகளுக்கு விருதுகள் வழங்கிய போது எடுத்த படம். அருகில் கல்லூரி முதல்வர் பி.முனிரத்தினம் கல்லூரி முதல்வர் மைதிலி உள்ளிட்ட பலர் உள்ளனர்.

தமிழ் சுடர்

திங்கள்கிழமை, மார்ச் 26, 2018




வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற முத்தமிழ் விழாவில் சிறப்பு விருந்தினராக நெல்லை கண்ணன் மாணவிகளுக்கு சான்றிதழ் மற்றும் சிறப்பு பரிசுகளை வழங்கினார். உடன் கல்லூரியின் நிறுவனர் பி.முனிரத்தினம், கல்லூரி முதல்வர் மைதிலி ஆகியோர் உள்ளனர்.

thinaboomi.com
தினபூமி, வேலூர்
மார்ச் 26, 2018

# ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி

(Re – Accredited with 'A' Grade By NAAC)
(Recognised under Section 2(f) & 12(B) of UGC Act)
(Permanent Affiliation Granted by Thiruvalluvar University)
திண்டிவனம் சாலை, வந்தவாசி, 604 408



## 19 - வது பட்டமளிப்பு விழா

நாள் : 26.03.2018 திங்கட்கிழமை
நேரம் : காலை 10.00 மணி
இடம் : கல்லூரி அரங்கம்

அவ்வமையம்

**திரு.A.கலியமூர்த்தி,IPS**

**முன்னாள் காவல் கண்காணிப்பாளர்,**

அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு பட்டச் சான்றிதழ்களை வழங்கி பட்டமளிப்பு சிறப்புரை நிகழ்த்த அன்புடன் இசைந்துள்ளார்கள்.

## அனைவரும் வருக! வருக!!

Ln.திரு.B.முனிரத்தினம்
நிறுவனர்
ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி, வந்தவாசி

Ln.திரு.M.ரமணன்,B.E.,
செயலர்
ஆட்சிமன்றக்குழு உறுப்பினர்
திருவள்ளுவர் பல்கலைக்கழகம்,
வேலூர்

Dr.S.மைதிலி, M.com.,M.phil.,Ph.D.,
முதல்வர்

## சுவாமி அபேதானந்தா கல்வி அறக்கட்டளை, வந்தவாசி.

குறிப்பு: 2016ஆம் ஆண்டில் தேர்ச்சிபெற்ற இளநிலை மற்றும் முதுநிலை மாணவிகள் அனைவரும் பட்டமளிப்பு விழாவினை முன்னிட்டு பதிவுசெய்து கொள்வதற்காக காலை 9.30 மணிக்குள் கல்லூரியில் இருத்தல் வேண்டும்.

தினமதி

மார்ச் 26 2018
திங்கட்கிழமை

# வந்தவாசி அகிலாண்டேஸ்வரி கல்லூரியில் முத்தமிழ் விழா கொண்டாட்டம்




வந்தவாசி, மார்ச். 26-
வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் முத்தமிழ் விழா கொண்டாடப்பட்டது

விழாவிற்கு கல்லூரி முதல்வர் மைதிலி தலைமை தாங்கினார். கல்லூரி நிறுவனர் முனிரத்தினம், கல்லூரி செயலாலரும் திருவள்ளுவர் பல்கலை கழக ஆட்சிமன்ற குழு உறுப்பினருமான ரமணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தமிழ்துறை உதவி பேராசிரியர் வெண்ணிலா வரவேற்புரை ஆற்றினார். உதவி பேராசிரியை கலைவாணி தமிழ்துறையின் ஆண்டறிக்கை வாசித்தார்.

சரவண்ன் விருந்தினர்களை அறிமுகப் படுத்தி உரையாற்றினார். விழாவில் நெல்லை கண்ணன் தமிழின் சிறப்புகள் பற்றியும், மாணவியர் வகுத்துக் கொள்ளவேண்டிய நெறிமுறைகள் குறித்து உரையாற்றினார்.

பல்வேறு போட்டிகளில் வென்றவர்களுக்கு சிறப்பு விருந்தினர் நெல்லை கண்ணன் பரிசுகள் வழங்கினார்.

முடிவில் உதவி பேராசிரியை கிருஷ்ண குமாரி நன்றி கூறினார்

தினபூமி, வேலூர்
மார்ச் 26, 2018

# வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி முத்தமிழ் விழா




வந்தவாசி,மார்ச்.26-

வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி முத்தமிழ் விழா நேற்று காலை கல்லூரி வளாகத்தில் கல்லூரி நிறுவனர் பா. முனிரத்தினம் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. விழாவுக்கு கல்லூரி செயலரும் திருவள்ளுவர் பல்கலைகழக ஆட்சிமன்ற குழு உறுப்பினருமான எம். இரமணன் முன்னிலை வகித்தார்.

கல்லூரி முதல்வர் முனவர் எஸ்.மைதிலி வாழ்த்துரை வழங்கினார். தமிழ்த்துறை உதவி பேரசிரியை முனைவர் வெண்ணிலா அனைவரையும் வரவேற்றார். தமிழ்த்துறை உதவி பேரசிரியை ஏ.கலைவாணி தமிழ்த்துறையின் ஆண்டறிக்கையை வாசித்தார். அரிமா ஆர்.சரவணன் சிறப்பு விருந்தினரை அறிமுகப்படுத்தி பேசினார். தமிழ்கடல் நெல்லைகண்ணன் தமிழின் சிறப்புகள் குறித்தும் மாணவிகள் வகுத்துக்கொள்ளவேண்டிய நெறிமுறைகள் குறித்தும் சிறப்புரையாற்றினார். விழாவில் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு சிறப்பு விருந்தினர் பரிசுகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியின் முடிவில் தமிழ்த்துறை உதவி பேரசிரியை ச.கிருஷ்ணகுமாரி நன்றி கூறினார்.

தினகரன்

4.6.2018

### அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி சார்பில்

# பொது சுகாதாரம் விழிப்புணர்வு துண்டு பிரசுரம் விநியோகம்



▶ வந்தவாசி அடுத்த செம்பூர் கிராமத்தில் அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி தூய்மை பாரத இயக்கம் சார்பில் மாணவிகள், வீடுவீடாக சென்று பொதுசுகாதர்ரம் குறித்து விழிப்புணர்வு துண்டு பிரசுரம் வழங்கினர்.

## வீடுவீடாக வழங்கினர்

**வந்தவாசி, ஜூன் 4:** வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியின் தூய்மை பாரத இயக்கம் சார்பில் பொது சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வீடுவீடாக சென்று வழங்கப்பட்டது.

வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி தூய்மை பாரத இயக்கம் சார்பில் கோடைகால உள் பயிற்சி சேவைப்பணி செம்பூர் கிராமத்தில் கடந்த 1ம் தேதி தொடங்கப்பட்டது. முகாமினை ஊரக வளர்ச்சித்துறை மாவட்ட உதவி திட்ட அலுவலர் முத்துராமன் தொடங்கி வைத்தார். கல்லூரி நிறுவனர் பா.முனிரத்தினம் தலைமை தாங்கினார். கல்லூரி செயலாளர் எம்.ரமணன், கல்லூரி முதல்வர் எஸ்.மைதிலி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பாரி, குப்புசாமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதைத் தொடர்ந்து, மாணவிகள் வீடுவீடாக சென்று பொதுசுகாதாரம் குறித்த விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் விநியோகம் செய்தனர். அப்போது, கழிவறைகளை எவ்வாறு பயன்படுத்த வேண்டும். கழிப்பறையை சுத்தமாக வைத்து கொள்வதால் ஏற்படும் நன்மை, திறந்த வெளியில் மலம் கழிப்பதால் ஏற்படும் தீமைகள், சாப்பிடுவதற்கு முன்னர் கை கால்களை கழுவி, வாய் கொப்பளித்தல் ஆகியன குறித்து மாணவிகள் விளக்கம் அளித்தனர். முடிவில் திட்ட ஒருங்கிணைப்பாளர் சுலோக்சனா நன்றி கூறினார்.

மருவூர் டைம்ஸ்
01-04-2018 ஞாயிற்றுக்கிழமை




பட்டமளிப்பு விழாவில் முன்னாள் காவல் துறை கண்காணிப்பாளர் எ.கலியமூர்த்தி 802 மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினார். உடன் கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம், திருவள்ளுவர் பல்கலைகழக சிண்டிகேட் உறுப்பினரும் கல்லூரி செயலருமான மு.ரமணன், கல்லூரி முதல்வர் மைதிலி ஆகியோர் உள்ளனர்.

# ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி பட்டமளிப்பு விழா 802 மாணவிகளுக்கு சிறப்புப் பரிசுகள் மற்றும் பட்டங்கள்

## முன்னாள் காவல்துறை கண்காணிப்பாளர் எ.கலியமூர்த்தி வழங்கினார்

வந்தவாசி, மார்ச்.30–

வந்தவாசியில் உள்ள ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி பட்டமளிப்பு விழாவில் முன்னாள் காவல் துறை கண்காணிப்பாளர் எ.கலியமூர்த்தி 802 மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினார்.

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி கல்லூரி பட்டமளிப்பு விழா கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம் தலைமையில் நடைபெற்றது. திருவள்ளுவர் பல்கலைக் கழக சிண்டிகேட் உறுப்பினரும் கல்லூரி செயலாளருமான மு.ரமணன் முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் மைதிலி அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

சிறப்பு விருந்தினர் முன்னாள் காவல் துறை கண்காணிப்பாளர் எ.கலிய மூர்த்தி சிறப்புரையாற்றி திருவள்ளுவர் பல்கலைகழக அளவில் பயோ கெமிஸ்டில் இளங்கலை பட்டதாரி ஆர்.காயத்ரிதேவி கோல்டு மெடல், முதுகலை பட்டதாரி கணிதம் மாணவி டி.தேவி ப்ரியா கோல்டு மெடல் உள்பட இளங்கலை மாணவிகள் 705 நபர்களும், முதுகலை மாணவிகள் 97 நபர்களும் ஆக மொத்தம் 802 மாணவிகளுக்கு பட்டங்கள் சிறப்பு பரிசுகள் மெடல்கள் வழங்கினார்.

சுவாமி அபேதானந்தா பாலிடெக்னிக் மேலாண்மை இயக்குனர் டி.கே.பி.மணி, அரிமா சங்க முன்னாள் ஆளுனர் தளபதி, ரோட்டரி சங்க மாவட்ட தலைவர் சரவணன், பேராசிரியர்கள் மாணவிகள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

தினத்தந்தி

23-6-2018



வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் நடந்த யோகா தின விழாவில் மனவளக்கலை பயின்ற மாணவிக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.

## வந்தவாசி

# கல்லூரிகளில் யோகா நிகழ்ச்சி

வந்தவாசி, ஜூன்.23–

வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் நாட்டு நலப்பணித் திட்டம் மற்றும் யோகா சங்கம் சார்பில் சர்வதேச யோகா தினம் கொண்டாடப்பட்டது. கல்லூரி தலைவர் பி.முனிரத்தினம் தலைமை தாங்கினார். கல்லூரி முதல்வர் எஸ்.மைதிலி முன்னிலை வகித்தார். மனவளக் கலை திட்ட அலுவலர் கற்பகவள்ளி வரவேற்றார்.

சிறப்பு அழைப்பாளர்களாக பிரம்மகுமாரிகள் அமைப்பைச் சேர்ந்த யோகா ஆசிரியர்கள் பி.கே.சாந்தி, பி.கே. முத்துலட்சுமி, டாக்டர் ஜெயமணி ஆகியோர் கலந்துகொண்டு யோகா பயிற்சியின் முக்கியத்துவம் குறித்து விளக்கி கூறி மாணவிகளுக்கு தியானம் மற்றும் உடற்பயிற்சிகளை செய்து காட்டினர். கடந்த ஆண்டு மனவளக்கலை பயின்ற மாணவிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. முடிவில் நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் வரலட்சுமி நன்றி கூறினார்.

இதுபோல் தெள்ளாரில் உள்ள ராஜா நந்திவர்மன் கல்லூரியில் நடைபெற்ற யோகா தினவிழாவில் கல்லூரி தலைவர் வி.முத்து கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றி வைத்து யோகாசனப் பயிற்சியை தொடங்கி வைத்தார். கல்லூரி பொருளாளர் எஸ்.பழனிச்சாமி, இயக்குனர்கள் அப்பாண்டைராஜன், மணி, சிவசங்கரன், ஆனந்தன், ராதா உள்பட பலர் கலந்து கொண்டனர். கல்லூரி முதல்வர் ஆர்.ஏழுமலை வரவேற்றார். மாணவ-மாணவிகளுக்கு யோகாசன பயிற்சிகள் அளிக்கப்பட்டது. பயிற்சிகளில் கலந்து கொண்ட மாணவ-மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. முடிவில் நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் க.சரவணன் நன்றி கூறினார்.

வந்தவாசி எஸ்.ஆர்.ஐ. கல்வி குழுமத்தைச் சேர்ந்த இன்டர்நேஷனல் மெட்ரிக்குலேஷன் பள்ளியில் யோகா தினம் குழுமத் தலைவர் டி. சிவலிங்கம் தலைமையில் நடந்தது. செயலாளர் வரலட்சுமி சிவலிங்கம், துணைத்தலைவர் டாக்டர் எஸ்.பாலாஜி ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் மாணவ-மாணவிகளுக்கு யோகா பயிற்சி வழங்கப்பட்டது. இதில் குழுமடீன் சந்திரகுமார், பள்ளி முதல்வர் பரிதாபானு உள்பட பலர் கலந்து கொண்டனர்.

தினகரன்

31.7.2018

வந்தவாசி அகிலாண்டேஸ்வரி கல்லூரியில்

# பல்கலைக்கழக ஆட்சிமன்ற குழு உறுப்பினர் திடீர் ஆய்வு



வந்தவாசி அகிலாண்டேஸ்வரி கல்லூரியில் ஆராய்ச்சி பாடப்பிரிவுகள் தொடங்க உள்ளதால், அதற்கான உள் கட்டமைப்பு வசதிகள் குறித்து வேலூர் திருவள்ளுவர் பல்கலைக்கழக ஆட்சிமன்ற குழு உறுப்பினர் ஏ.முகமது சாதிக் ஆய்வகத்தை ஆய்வு செய்தார்.

வந்தவாசி, ஜூலை 31: வந்தவாசி அகிலாண்டேஸ்வரி கல்லூரியில் ஆராய்ச்சி படாப்பிரிவுகள் தொடங்க பட உள்ளதால் அதற்கான உள் கட்டமைப்பு வசதிகள் குறித்து வேலூர் திருவள்ளுவர் பல்கலைக்கழக ஆட்சிமன்ற குழு உறுப்பினர் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் மைக்ரோ பயாலஜி, பையோ கெமிஸ்ட்டி ஆராயச்சி பாடப்பிரிவுகள் தொடங்கப்பட உள்ளது. இதனால் அதற்கான உள் கட்டமைப்பு வசதிகளான தகுதியான பேராசியர்கள், ஆய்வகம், நூலகம் உள்ளிட்ட வசதிகள் உள்ளதா என அக்கல்லூரியில் வேலூர் திருவள்ளுவர் பல்கலைக்கழக ஆட்சிமன்ற குழு உறுப்பினரரும், கலவை ஆதிபாரசக்தி கல்லூரி முதல்வருமான ஏ.முகமது சாதிக் நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது கல்லூரி நிறுவனர் பா.முனிரத்தினம், கல்லூரி செயலாளர் எம்.ரமணன், கல்லூரி முதல்வர் எஸ்.மைதிலி ஆகியோர் உடனிருந்தனர்.

தினமணி

ஞாயிற்றுக்கிழமை, 15 ஜூலை 2018

# கல்லூரியில் பயிற்சி முகாம்



பயிற்சி முகாமில் பேசுகிறார் வேலூர் ஊரிசு கல்லூரியின் ஓய்வு பெற்ற வணிகவியல் துறைத் தலைவர் எம்.அன்பழகன்.

**வந்தவாசி, ஜூலை 14:** வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் பயிற்சி முகாம் சனிக்கிழமை நடைபெற்றது.

கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம் தலைமை வகித்தார். கல்லூரிச் செயலர் எம்.ரமணன், கல்லூரி முதல்வர் எஸ்.மைதிலி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி துணை முதல்வர் கே.சுகுணா வரவேற்றார்.

ஆராய்ச்சி குறித்தும், கலைத் துறையில் ஆய்வுக் கட்டுரைகள் எழுதுவது குறித்தும் வேலூர் ஊரிசு கல்லூரியின் ஓய்வு பெற்ற வணிகவியல் துறைத் தலைவர் எம்.அன்பழகன் பேசினார்.

அறிவியல் ஆய்வுக் கட்டுரைகள் எழுதுவது குறித்தும், அவற்றை எவ்வாறு வெளியிடுவது என்பது குறித்தும் வேலூர் வி.ஐ.டி. பல்கலைக்கழக வேதியியல் துறைப் பேராசிரியர் தேசிகன் ராஜகோபால் பேசினார்.

இதில், பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த பேராசிரியர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர். கல்லூரி நுண்ணுயிரியல் துறைத் தலைவர் கே.ஜெகதி நன்றி கூறினார்.

புதன்கிழமை, 27 ஜூன், 2018

தினமணி



**வந்தவாசியில்...:** வந்தவாசி தாலுகா செஞ்சிலுவைச் சங்கம், வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி சார்பில், உலக போதை பழக்க எதிர்ப்பு தின விழிப்புணர்வுப் பேரணி வந்தவாசியில் நடைபெற்றது.

பேரணிக்கு ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம் தலைமை வகித்தார். வந்தவாசி வட்டாட்சியர் ஆர்.முரளிதரன் பேரணியை கொடியசைத்து தொடக்கி வைத்தார்.

வந்தவாசி தாலுகா செஞ்சிலுவை சங்கத் தலைவர் எம்.ரமணன், துணைத் தலைவர் ஆர்.சரவணன், செயலர் பா.சீனிவாசன், பொருளாளர் எ.விஜயன் மற்றும் கல்லூரி மாணவிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர். வந்தவாசி வட்டாட்சியர் அலுவலக வளாகத்திலிருந்து தொடங்கிய பேரணி, பஜார் வீதி, தேரடி வழியாக வந்தவாசி ஐந்து கண் பாலம் அருகில் சென்றடைந்தது. பேரணியின் போது, பொதுமக்களுக்கு விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டன.

தினத்தந்தி

27-6-2018



### வந்தவாசியில்

# போதைப்பழக்கம் எதிர்ப்பு தின விழிப்புணர்வு ஊர்வலம்

வந்தவாசி, ஜூன்.27–

வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியின் இளஞ் செஞ்சிலுவை சங்கம், நாட்டு நலப்பணித்திட்டம் மற்றும் வந்த வாசி தாலுகா ரெட்கிராஸ் சங்கம் ஆகியவை இணைந்து உலக போதைப்பழக்கம் எதிர்ப்பு தின விழிப்புணர்வு ஊர்வலத்தை நடத்தியது.

ஊர்வலத்துக்கு ரெட்கிராஸ் சங்க தலைவரும், ஸ்ரீ அகிலாண் டேஸ்வரி மகளிர் கல்லூரி செயலாளருமான எம்.ரமணன் தலைமை தாங்கினார். ரெட்கிராஸ் சங்க துணைத்தலைவர் ஆர்.சரவணன், பொருளாளர் ஏ.எஸ்.ஏ.விஜயன், செயலாளர் பா.சீனிவாசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஊர்வ லத்தை தாசில்தார் முரளிதரன் கொடியசைத்து தொடங்கி வைத்து, விழிப்புணர்வு துண்டு பிரசுரத்தின் முதல் பிரதியை வெளியிட, அதனை கல்லூரி தலைவர் பி.முனிரத்தினம் பெற் றுக்கொண்டார். வந்தவாசி தாலுகா அலுவலக வளாகத்தில் தொடங்கிய ஊர்வலம் முக்கிய வீதிகளின் வழியாக சென்று, 5கண்பாலத்தில் முடிவடைந்தது. இதில் ரெட்கிராஸ் சங்கத்தி னர், கல்லூரி மாணவிகள் கலந்துகொண்டனர்.

தினமணி

புதன்கிழமை, 1 ஆகஸ்ட் 2018

# ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி கல்லூரியில் ஆய்வு



வந்தவாசி ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் ஆய்வு மேற்கொண்ட வேலூர் திருவள்ளுவர் பல்கலைக்கழக ஆட்சி மன்றக் குழு உறுப்பினர் ஏ.முகமதுசாதிக் தலைமையிலான குழுவினர்.

**வந்தவாசி, ஜூலை 31:** வந்தவாசி ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் ஆராய்ச்சி பாடப் பிரிவுகள் தொடங்கப்பட உள்ளதையொட்டி, அதற்கான உள் கட்டமைப்பு வசதிகள் குறித்து வேலூர் திருவள்ளுவர் பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழு உறுப்பினர் ஏ.முகமதுசாதிக் தலைமையிலான குழுவினர் இந்தக் கல்லூரியில் திங்கள்கிழமை ஆய்வு செய்தனர்.

வந்தவாசி ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் நுண்ணுயிரியல் (மைக்ரோபயலாஜி), உயிரி வேதியியல் (பயோகெமிஸ்ட்ரி) ஆகிய பாடங்களில் ஆராய்ச்சி பாடப் பிரிவுகள் தொடங்கப்பட உள்ளன.

இதையொட்டி, இந்தக் கல்லூரியில் உள்ள ஆய்வக வசதி, நூலக வசதி உள்ளிட்டவை குறித்து பல்கலைக்கழக ஆட்சி மன்றக் குழு உறுப்பினர் ஏ.முகமதுசாதிக் தலைமையிலான குழுவினர் ஆய்வு மேற்கொண்டனர். ஆய்வின் போது, கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம், செயலர் எம்.ரமணன், முதல்வர் எஸ்.மைதிலி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

மருவூர் டைம்ஸ்

05-08-2018 ஞாயிற்றுக்கிழமை

# ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் ஆராய்ச்சி (பி.எச்.டி) பாடப்பிரிவுகள் துவக்குவதற்கான பல்கலைக்குழுவினரின் ஆய்வு



வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் 2018 2019 ஆம் கல்வியாண்டிலிருந்து உயிர்வேதியியல் மற்றும் நுண்ணுயிரியல் துறைகளில் ஆராய்ச்சிப்பாடப்பிரிவுகள் (பி.எச்.டி) துவக்குவதற்காக திருவள்ளுவர் பல் கலைக்கழகத்தால் நியமிக்கப்பட்ட ஆய்வுக்குழுவினர் மூலம் ஆய்வு நடைபெற்றது. இந்த குழுவில் திருவள் ளுவர் பல்கலைக்கழக ஆட்சிமன்ற குழு உறுப்பினரும், ஆதிபராசக்தி கலைக் கல்லூரியின் முதல்வருமான முனைவர் மு.முகமது சாதிக், ஆதிபராசக்தி கலைக்கல்லூரியின் நுண்ணுயிரியல் துறை தலைவரும் பேராசிரியருமான முனைவர் வு.பன்னீர்செல்வம் உள்ளிட் டவர்கள் கல்லூரியின் கட்டமைப்புகள், ஆய்வு கூடங்கள், நூலகம் உள்ளிட்டவை குறித்து ஆய்வு மேற்கொண்டு திரு வள்ளுவர் பல்கலைக்கழகத்திற்கு ஆய்வ றிக்கையை சமர்பித்தனர்.

தமிழ் சுடர்

புதன்கிழமை, ஆகஸ்ட் 1, 2018



வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் ஆராய்ச்சி (பி.எச்.டி) பாடப்பிரிவுகள் துவக்குவபட உள்ளது அதற்கான கட்டமைப்புகள், ஆய்வு கூடங்கள், நூலகம் உள்ளிட்டவைகள் குறித்து திருவள்ளுவர் பல்கலைக்கழக ஆட்சிமன்ற குழு உறுப்பினரும், ஆதிபராசக்தி கலைக்கல்லூரியின் முதல்வருமான முனைவர் மு.முகமது சாதிக், ஆதிபராசக்தி கலைக்கல்லூரியின் நுண்ணுயிரியல் துறை தலைவரும் பேராசிரியருமான முனைவர் வு.பன்னீர்செல்வம் ஆய்வு செய்தனர்.

ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில்

# பி.எச்.டி பாடப்பிரிவுகள் துவக்குவதற்கான ஆய்வு

வந்தவாசி,ஆக.1

வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் ஆராய்ச்சி (பி.எச்.டி) பாடப்பிடணீவுகள் துவக்குவபட உள்ளது அதற்கான கட்டமைப்புகள், ஆய்வு கூடங்கள், நூலகம் உள்ளிட்டவைகள் குறித்து பல்கலைக் குழுவினர் ஆய்வு செய்தனர்

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் 2018 – 2019 ஆம் கல்வியாண்டிலிருந்து உயிர்வேதியியல் மற்றும் நுண்ணுயிரியல் துறைகளில் ஆராய்ச்சிப்பாடப்பிரிவுகள் (பி.எச்.டி) துவக்குவதற்காக திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தால் நியமிக்கப்பட்ட ஆய்வுக்குழுவினர் மூலம் ஆய்வு நடைபெற்றது. இந்த குழுவில் திருவள்ளுவர் பல்கலைக்கழக ஆட்சிமன்ற குழு உறுப்பினரும், ஆதிபராசக்தி கலைக் கல்லூரியின் முதல்வருமான முனைவர் மு.முகமது சாதிக், ஆதிபராசக்தி கலைக்கல்லூரியின் நுண்ணுயிரியல் துறை தலைவரும் பேராசிரியருமான முனைவர் பன்னீர் செல்வம் உள்ளிட்டவர்கள் கல்லூரியின் கட்டமைப்புகள், ஆய்வு கூடங்கள், நூலகம் உள்ளிட்டவை குறித்து ஆய்வு மேற்கொண்டு திருவள்ளுவர் பல்கலைக்கழகத்திற்கு ஆய்வறிக்கையை சமர்பித்தனர்.

தினமலர் வேலூர் ஞாயிறு ஆகஸ்ட் 19, 2018



வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியின் சார்பில் கேரள மாநிலத்துக்கு நிவாரண பொருட்கள் வழங்கப்பட்டது.

# வந்தவாசியிலிருந்து கேரளாவுக்கு நிவாரண பொருட்கள்

**வந்தவாசி, ஆக. 19—**

*வந்தவாசி தாலுகா அலுவலகத்தின் சார்பில் கேரள மாநிலத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண பொருட்கள் வழங்கலாம் என்று அறிவிப்பு வெளியிடப்பட்டது.*

இதன்படி வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி, ஆசியன் அகாடமி கல்வி நிறுவனம், ஜவுளிக் கடை வியாபாரிகள், தொண்டு நிறுவனங்கள் சேர்ந்து அரிசி மூட்டைகள், பாய், வேட்டி, சேலை, போர்வைகள், தலையணை, சீருடைகள், காலேஜ் பேக், பிரட், பிஸ்கட் உள்ளிட்ட உணவுப்பொருட்கள் ரூ. 10 லட்சம் மதிப்பீட்டில் தாசில்தார் முரளிதரன் முன்னிலையில் ஒப்படைக்கப்பட்டது.

இந்த பொருட்கள் அனைத்தும், மாவட்ட கலெக்டரின் உத்தரவின்பேரில் கேரள மாநிலத்திற்கு நிவாரண பொருட்களாக அனுப்பப்பட்டது.

அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி நிறுவனர் முனிரத்தினம் , ஜவுளிக்கடை அதிபர் இசாக், அகாடமி நிறுவனர் ரகமத்துல்லா உள்ளிட்ட பலரும் உடனிருந்தனர்.

தினத்தந்தி

16-8-2018

வந்தவாசி பகுதி

# பள்ளி, கல்லூரிகளில் சுதந்திர தின விழா

வந்தவாசி, ஆக.16-
வந்தவாசி பகுதியில் உள்ள பள்ளி-கல்லூரிகளில் சுதந்திர தினவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.




அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் நடந்த விழாவில் மாணவிகளுக்கு கல்லூரி தலைவர் பி.முனிரத்தினம் பரிசுகளை வழங்கினார்.

## அகிலாண்டேஸ்வரி கல்லூரி

வந்தவாசியில் உள்ள அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் சுதந்திர தின விழா நடந்தது. விழாவிற்கு கல்லூரி தலைவர் பி.முனிரத்தினம் தலைமை தாங்கி தேசிய கொடியை ஏற்றி வைத்தார். கல்லூரி செயலாளரும் வேலூர் திருவள்ளுவர் பல்கலைக்கழக ஆட்சி மன்றக் குழு உறுப்பினருமான எம்.ரமணன் முன்னிலை வகித்தார். முதல்வர் எஸ்.மைதிலி, அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்வியியல் கல்லூரி முதல்வர் நிமாவதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவில் அணிவகுப்பு நடத்திய மாணவிகளுக்கும், பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்ட மாணவிகளுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

## திருவள்ளுவர் பொறியியல் கல்லூரி

வந்தவாசி திருவள்ளுவர் பொறியியல் கல்லூரியில் நடந்த விழாவில் கல்லூரி தலைவர் பாலாமணி அருணாச்சலம் தேசிய கொடியை ஏற்றி வைத்தார். விழாவில் முதன்மை இயக்குனர் பிரபாகரன், இயக்குனர்கள் பொய்யாதப்பன், ஜோதிநாதன் மற்றும் கல்லூரி துறை தலைவர்கள், மாண்வர்கள் கலந்து கொண்டனர்.

தெள்ளார் சுவாமி அபேதானந்தா பாலிடெக்னிக் கல்லூரியில் நடந்த சுதந்திர தினவிழாவில் கல்லூரி தாளாளர் டி.கே.பி.மணி தேசிய கொடி ஏற்றி வைத்தார். இதில் கல்லூரி முதல்வர் ஹரிகரன், கல்லூரி இயக்குனர்கள் வி.ரகுராம், டி,பெருமாள் ரெட்டியார், எஸ்.வேமன்னா, எஸ்.ரஷ்யராஜ், ஆர்.சுரேஷ், ஆர்.கிருஷ்ணமூர்த்தி மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

## ராஜாநந்திவர்மன்

தெள்ளார் ராஜா நந்திவர்மன் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் அதன் தலைவர் வி.முத்து கொடியேற்றி வைத்தார். விழாவில் கல்லூரி துணை முதல்வர் ரா.ஏழுமலை, இயக்குனர்கள் ஆனந்தன், மணி, அப்பான்டைராஜ், சங்கர், சுரேஷ், ராதாகிருஷ்ணன், ரங்கசாமி, தருமன்மற்றும் மாணவ-மாணவிகள் கலந்து கொண்டனர்.

தினத்தந்தி

19-8-2018



வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி சார்பில் நிவாரண பொருட்கள் வழங்கிய போது எடுத்த படம்.

## திருவண்ணாமலை மாவட்டத்தில் இருந்து

# கேரளாவுக்கு வெள்ள நிவாரண பொருட்கள்

வந்தவாசி, ஆக.19-

திருவண்ணாமலை மாவட்டத்தில் இருந்து கேரளாவுக்கு வெள்ள நிவாரண பொருட்கள் அனுப்பப்பட்டன.

### அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி

பலத்த மழையால் பாதிப்புக்குள்ளான கேரள மாநில மக்களுக்கு உதவும் பொருட்டு வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி சார்பில் 20 மூட்டை அரிசி, 200 பாய்கள், 50 செட் சீருடைகள், 50 கல்லூரி பைகள், 200 பெட்டி மெழுகுவர்த்தி, 200 பெட்டி கொசுவத்தி சுருள், 36 பெட்டி தீப்பெட்டிகள் ஆகியவற்றை கல்லூரி தலைவர் பி.முனிரத்தினம் வந்தவாசி வருவாய் ஆய்வாளர் அருணாச்சலம், கிராம நிர்வாக அலுவலர்கள் ஆகியோரிடம் வழங்கினார்.

அப்போது கல்லூரி துணை முதல்வர் கே.சுகுணா, கல்வியியல் கல்லூரி முதல்வர் வி.நிமாவதி மற்றும் மாணவிகள் உடன் இருந்தனர். இந்த நிவாரண பொருட்கள் வெள்ள நிவாரண மையத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

தினமணி

புதன்கிழமை, 29 ஆகஸ்ட் 2018

# கல்லூரிகளுக்கு இடையிலான மகளிர் கபடிப் போட்டி



கபடிப் போட்டியில் வென்ற வேலூர் முத்துரங்கம் அரசு கலைக் கல்லூரி அணிக்கு பரிசுக் கோப்பை, சான்றிதழ்களை வழங்குகிறார் வேலூர் டி.கே.எம். மகளிர் கல்லூரி உடல் கல்வி இயக்குநர் ஈ.அம்சா.

**வந்தவாசி, ஆக.28:** வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் திருவள்ளுவர் பல்கலைக்கழக வேலூர் மண்டல அளவிலான கல்லூரிகளுக்கு இடையேயான மகளிர் கபடிப் போட்டி திங்கள்கிழமை நடைபெற்றது.

வேலூர் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் மற்றும் வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி இணைந்து நடத்திய இந்தப் போட்டியில் வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்களைச் சேர்ந்த 12 கல்லூரிகளில் இருந்து மாணவிகள் பங்கேற்று விளையாடினர். கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம் தலைமை வகித்தார். கல்லூரிச் செயலர் எம்.ரமணன், கல்லூரி முதல்வர் எஸ்.மைதிலி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரிப் பேராசிரியை ஜெ.ஜெசிமாலா வரவேற்றார்.

வேலூர் டி.கே.எம். மகளிர் கல்லூரி உடல் கல்வி இயக்குநர் ஈ.அம்சா போட்டிகளைத் தொடக்கிவைத்தார். இதில், வேலூர் முத்துரங்கம் அரசு கலைக் கல்லூரி அணி முதலிடத்தையும், வேலூர் டி.கே.எம். மகளிர் கல்லூரி அணி இரண்டாம் இடத்தையும் பெற்றன. வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசுக் கோப்பை, சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. கல்லூரி துணை முதல்வர் கே.சுகுணா நன்றி கூறினார்.

# கேரள மக்களுக்கு நிவாரணப் பொருள்கள் அனுப்பி வைப்பு


தினமணி

ஞாயிற்றுக்கிழமை, 19 ஆகஸ்ட் 2018






செய்யாறு கோட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து கேரளத்துக்கு லாரி மூலம் அனுப்பி வைக்கப்படும் நிவாரணப் பொருள்கள். (வலது) கேரள மாநில மக்களுக்காக நிவாரணப் பொருள்கள் வழங்கிய வந்தவாசி ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி மாணவிகள்.

**திருவண்ணாமலை/செய்யாறு/வந்தவாசி, ஆக.18:** செய்யாறு கோட்டத்தில் இருந்து ரூ.25.17 லட்சம் மதிப்பிலான நிவாரணப் பொருள்கள் கேரளத்துக்கு சனிக்கிழமை அனுப்பி வைக்கப்பட்டன.

மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கேரள மாநில மக்களுக்கு வழங்குவதற்காக செய்யாறு கோட்டத்தைச் சேர்ந்த செய்யாறு, வந்தவாசி, சேத்துப்பட்டு, வெம்பாக்கம் ஆகிய வட்டங்களில் உள்ள பல்வேறு தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், வணிக நிறுவனங்கள், வியாபாரிகள் மற்றும் தன்னார்வலர்கள் பலர் தாங்களாக முன்வந்து நிவாரணப் பொருள்களை வழங்கினர்.

அவ்வாறு வழங்கப்பட்ட நிவாரணப் பொருள்கள் செய்யாறு வட்டத்தில் ரூ.10,99, 888 மதிப்பிலும், வந்தவாசி வட்டத்தில் ரூ.6,26,540 மதிப்பிலும், சேத்துப்பட்டு வட்டத்தில் ரூ.5,21,209 மதிப்பிலும், வெம்பாக்கம் வட்டத்தில் ரூ.1,69,500 மதிப்பிலும் என மொத்தம் ரூ.25,17,097 மதிப்பிலான நிவாரணப் பொருள்கள் பெறப்பட்டன.

இந்த நிவாரணப் பொருள்களை செய்யாறு வருவாய்க் கோட்டாட்சியர் ஆர்.அன்னம்மாள் மேற்பார்வையில், வருவாய்த் துறையினர் 2 லாரிகள் மூலம் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மூலமாக கேரள மாநிலத்துக்கு அனுப்பி வைத்தனர்.

**வந்தவாசி:** இதேபோல, கேரள மக்களுக்கு வழங்குவதற்காக நிவாரணப் பொருள்களை வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி மாணவிகள் வந்தவாசி வருவாய்த் துறையினரிடம் சனிக்கிழமை வழங்கினர்.

இதில், 20 மூட்டை அரிசி, 200 பாய் மற்றும் ஆடைகள், மெழுகுவர்த்தி, கொசுவர்த்தி உள்ளிட்டவை நிவாரணப் பொருள்களாக வழங்கப்பட்டன.

இந்தப் பொருள்களை வந்தவாசி துணை வட்டாட்சியர் குமரவேலிடம் கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம் வழங்கினார். கல்லூரி துணை முதல்வர் கே.சுகுணா, வருவாய் ஆய்வாளர் அருணாச்சலம், கிராம நிர்வாக அலுவலர்கள் செந்தில்குமார், கணேஷ் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**திருவண்ணாமலையில்...:** இதேபோல, ஜவ்வாதுமலை ஸ்பீடு தொண்டு நிறுவனம் சார்பில், கேரள மக்களுக்கு 10 மூட்டை அரிசியை திருவண்ணாமலை கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர் சரஸ்வதியிடம் ஸ்பீடு தொண்டு நிறுவனத் தலைவர் எம்.சி.அசோக், செயலர் எம்.கலைவாணன், சமூக ஆர்வலர் இரா.பாலு உள்ளிட்டோர் சனிக்கிழமை வழங்கினர்.

தினகரன்

30.8.2018

அகிலாண்டேஸ்வரி கல்லூரியில் மகளிர் கபடி போட்டி

# 12 கல்லூரி மாணவிகள் பங்கேற்பு



▶ வந்தவாசி அகிலாண்டேஸ்வரி கல்லூரியில் நடந்த வேலூர் மண்டல அளவில் மகளிருக்கான கபடி போட்டியில் வெற்றி பெற்ற அணிக்கு மண்டல உடல் கல்வி இயக்குனர் இ.அம்சா பரிசு வழங்கினார். உடன், கல்லூரி செயலாளர் எம்.ரமணன், கல்லூரி முதல்வர் எஸ்.மைதிலி.

வந்தவாசி, ஆக.30: வந்தவாசி அகிலாண்டேஸ்வரி கல்லூரியில் நடந்த வேலூர் மண்டல அளவில் மகளிருக்கான கபடி போட்டியில் 12 கல்லூரியை சேர்ந்த மாணவிகள் கலந்துகொண்டனர்.

வேலூர் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் மற்றும் வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி சார்பில் வேலூர் மண்டலத்தில் உள்ள கல்லூரிகளுக்கிடையிலான பெண்களுக்கான கபடி போட்டி கல்லூரி வளாகத்தில் நடந்தது.

இதில் திருவண்ணாமலை, வேலூர் மாவட்டங்களைச் சேர்ந்த 12 கல்லூரிகளை சேர்ந்த மாணவிகள் கலந்து கொண்டனர். போட்டியை கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம் கொடியசைத்து தொடங்கி வைத்தார். கல்லூரி செயலாளர் எம் ரமணன் தலைமை தாங்கினார். கல்லூரி முதல்வர் எஸ். மைதிலி முன்னிலை வகித்தார். கல்லூரி உடற்கல்வி இயக்குனர் ஜெசிமலா வரவேற்றார்.

இதில் டி.கே.எம். கல்லூரி பேராசிரியையும், வேலூர் மண்டல உடல் கல்வி இயக்குனருமான இ.அம்சா வெற்றி பெற்ற அணிக்கு கோப்பையை வழங்கினார். முடிவில் கல்லூரி துணை முதல்வர் சுகுணா நன்றி கூறினார்.

சனிக்கிழமை, 1 செப்டம்பர், 2018

தினமணி

# டெங்கு தடுப்பு விழிப்புணர்வு முகாம்




முகாமில் பேசிய வந்தவாசி நகராட்சி ஆணையர் எஸ்.பார்த்தசாரதி.

**வந்தவாசி, ஆ.க.31:** வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் டெங்கு நோய்த் தடுப்பு - பொது சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு முகாம் வியாழக்கிழமை நடைபெற்றது.

முகாமுக்கு கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம் தலைமை வகித்தார். முதல்வர் எஸ்.மைதிலி முன்னிலை வகித்தார். செஞ்சுருள் சங்க ஒருங்கிணைப்பாளர் ஏ.கலைவாணி வரவேற்றார். பொது சுகாதார விழிப்புணர்வு குறித்து வந்தவாசி நகராட்சி ஆணையர் எஸ்.பார்த்தசாரதி, நகராட்சித் துப்புரவு ஆய்வாளர் ராமலிங்கம் ஆகியோர் பேசினர்.

டெங்கு நோய் தடுப்பு விழிப்புணர்வு குறித்து வழூர் வட்டார மருத்துவ அலுவலர் ஜி.திருமூர்த்தி, வட்டார சுகாதார மேற்பார்வையாளர் பன்னீர்செல்வ்ம் ஆகியோர் பேசினர். கல்லூரி சத்துணவு சங்க ஒருங்கிணைப்பாளர் நிர்மலாதேவி நன்றி கூறினார்.

தினத்தந்தி

29-8-2018



## அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில்

# மண்டல அளவிலான கபடி போட்டி

வந்தவாசி, ஆக.29-

வேலூர் திருவள்ளுவர் பல்கலைகழகமும், வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியும் இணைந்து வேலூர் மண்டல கல்லூரிகளுக்கு இடையேயான பெண்களுக்கான கபடி போட்டியை கல்லூரி வளாகத்தில் நடத்தியது. இதில் வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் இருந்து 12 கல்லூரிகளை சேர்ந்த மாணவிகள் கலந்துகொண்டனர்.

நிகழ்ச்சிக்கு அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம் தலைமை தாங்கினார். கல்லூரி செயலாளரும், வேலூர் திருவள்ளுவர் பல்கலைக்கழக ஆட்சிமன்ற குழு உறுப்பினருமான எம்.ரமணன், கல்லூரி முதல்வர் எஸ்.மைதிலி ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஜெசிமாலா வரவேற்றார். வேலூர் டி.கே.எம். மகளிர் கல்லூரி உடற்கல்வி இயக்குனரும், மண்டல தலைவருமான இ.அம்சா கலந்துகொண்டு போட்டிகளை தொடங்கிவைத்தார்.

போட்டியில் வேலூர் முத்துரங்கம் அரசு கலைக்கல்லூரி மாணவிகள் முதல் பரிசும், வேலூர் டி.கே.எம். மகளிர் கல்லூரி மாணவிகள் 2-ம் பரிசும் பெற்றனர். வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. முடிவில் கல்லூரி துணை முதல்வர் கே.சுகுணா நன்றி கூறினார்.

செவ்வாய்க்கிழமை, 25 செப்டம்பர் 2018

தினமணி

# கல்லூரியில் வணிகவியல் துறை கருத்தரங்கம்

வந்தவாசி, செப். 24: வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் வணிகவியல் துறை சார்பில், தேசிய அளவிலான கருத்தரங்கம் திங்கள்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம் தலைமை வகித்தார். கல்லூரி முதல்வர் எஸ்.மைதிலி, செயலர் எம்.ரமணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

காவேரிப்பாக்கம் கலை, அறிவியல் கல்லூரி நிறுவனர் வி.பாலு கருத்தரங்கைத் தொடக்கிவைத்துப் பேசினார்.

'இந்திய வணிகம் - வியாபார வளர்ச்சியில் சரக்கு, சேவை வரியின் பங்கு' என்ற தலைப்பில் செங்கல்பட்டு ராஜேஸ்வரி வேதாச்சலம் அரசு கலைக் கல்லூரி வணிகவியல் துறை இணைப் பேராசிரியர் ஜெ.சீனிவாசனும், சென்னை ஆடிட்டர் பி.எஸ்.ஸ்ரீதரும் கருத்துரையாற்றினர்.

கருத்தரங்கில் வேலூர், ஆற்காடு, காஞ்சிபுரம், செய்யாறு, திண்டிவனம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் உள்ள கல்லூரிகளிலிருந்து 600-க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்று தங்களது ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்தனர்.

தொடர்ந்து, சிறந்த ஆய்வுக் கட்டுரைகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

கல்லூரி வணிகவியல் துறைத் தலைவர் ஜெ.தமிழ்ச்செல்வி நன்றி கூறினார்.



தினகரன்

11.9.2018

## வந்தவாசி நகராட்சி சார்பில்

# பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி



வந்தவாசி நகராட்சி சார்பில் பிளாஸ்டிக் ஒழிப்பு குறித்த கல்லூரி மாணவிகள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணி நடந்தது. உடன் நகராட்சி ஆணையாளர் ச.பார்த்தசாரதி, போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் வரதராஜ், சுகாதார ஆய்வாளர் ராமலிங்கம்.

வந்தவாசி, செப்.11: வந்தவாசி நகராட்சி, அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி நாட்டு நலப்பணி திட்ட மாணவிகள் இணைந்து பிளாஸ்டிக் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு பேரணி நடத்தினர். நகராட்சி அலுவலகத்தில் இருந்து புறப்பட்ட பேரணியை நகராட்சி ஆணையாளர் ச.பார்த்தசாரதி கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

இதில் ரோட்டரி சங்க தலைவர் டி.குமார், நகராட்சி சுகாதார ஆய்வாளர் ராமலிங்கம், பொறியாளர் பிரிவு உதவியாளர் சிவா முன்னிலை வகித்தனர். பேரணி பழைய பஸ் நிலையம், கோட்டை மூலை, தாலுகா அலுவலகம் சாலை, பஜார்வீதி, தேரடி, காந்தி சாலை ஆரணி சாலை வழியாக மீண்டும் நகராட்சி அலுவலகத்தை அடைந்தது.

பேரணியில், பிளாஸ்டிக் இல்லாத உலகை உருவாக்குவோம், பிளாஸ்டிக்கை தவிர்போம், நிலத்தடி நீர் காப்போம், பிளாஸ்டிக் பயன்படுத்துவதை தவிர்ப்போம், வருங்கால சந்ததியினர் வாழ வழிவகுப்போம் என்பன உள்ளிட்ட பல்வேறு விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தி சென்றனர். முடிவில் துப்புரவு பணி மேற்பார்வையாளர் ஏசுதாஸ் நன்றி கூறினார்.

தினமணி

வெள்ளிக்கிழமை, 11 ஜனவரி 2019

# மதுவின் தீமைகள் குறித்த விழிப்புணர்வு ஊர்வலம்



ஊர்வலத்தை கொடியசைத்து தொடக்கிவைத்த மாவட்டக் கலால் உதவி ஆணையர் எம்.எஸ்.பாலதண்டாயுதபாணி.

**வந்தவாசி, ஜன.10:** மது விலக்கு, ஆயத்தீர்வைத் துறை சார்பில், மது அருந்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்த விழிப்புணர்வு ஊர்வலம் வந்தவாசியில் வியாழக்கிழமை நடைபெற்றது.

ஊர்வலத்துக்கு வந்தவாசி சமூகப் பாதுகாப்புத் திட்ட வட்டாட்சியர் சுபாஷ் தலைமை வகித்தார். திருவண்ணாமலை மாவட்டக் கலால் உதவி ஆணையர் எம்.எஸ்.பாலதண்டாயுதபாணி கொடியசைத்து ஊர்வலத்தை தொடக்கிவைத்தார்.

ஊர்வலத்தில், துணை வட்டாட்சியர் குமரவேல், வருவாய் ஆய்வாளர் அருணாச்சலம் மற்றும் வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி மாணவிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

வந்தவாசி வட்டாட்சியர் அலுவலக வளாகத்திலிருந்து தொடங்கிய ஊர்வலம், பஜார் வீதி, தேரடி, காந்தி சாலை வழியாகச் சென்றது.

தினகரன் திருவ

## வந்தவாசி அகிலாண்டேஸ்வரி கல்லூரியில்

# சாலை பாதுகாப்பு வார விழா விழிப்புணர்வு கருத்தரங்கம்

### டிஎஸ்பி பங்கேற்பு

வந்தவாசி, பிப்.11: வந்தவாசி அகிலாண்டேஸ்வரி கல்லூரியில் நடந்த சாலை பாதுகாப்பு வார விழா விழிப்புணர்வு கருத்தரங்கில் டிஎஸ்பி அசோக்குமார் கலந்து கொண்டார்.

வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி, தெற்கு காவல் நிலையம் ஆகியன சார்பில், சாலை பாதுகாப்பு வார விழா விழிப்புணர்வு கருத்தரங்கம் கல்லூரி வளாகத்தில் நேற்று முன்தினம் நடத்தின. கல்லூரி நிறுவனர் பா.முனிர்த்தினம் தலைமை தாங்கினார். கல்லூரி செயலாளர் எம்.ரமணன், போலீஸ் இன்ஸ்பெக்டர் அழகுராணி, சப்-இன்ஸ்பெக்டர் வரதராஜன் முன்னிலை வகித்தனர். கல்லூரி முதல்வர் எஸ்.மைதிலி வரவேற்றார்.




▶ வந்தவாசி அகிலாண்டேஸ்வரி கல்லூரியில் நடந்த சாலை பாதுகாப்பு வார விழிப்புணர்வு கருத்தரங்கில் டிஎஸ்பி அசோக்குமார் பேசினார். உடன் போலீஸ் இன்ஸ்பெக்டர் அழகுராணி, கல்லூரி செயலாளர் எம்.ரமணன்.

கருத்தரங்கில் டிஎஸ்பி (பொறுப்பு) அசோக்குமார் பேசியதாவது:

பெண்கள் எப்போதும் அவசரமாக இருசக்கர வாகனத்தை இயக்குகின்றனர். வளைவில் திரும்பும் போது எச்சரிக்கை சைகைகள் செய்வது இல்லை. இதனால் இவர்களுக்கு விபத்து ஏற்படுவதைவிட முன்னும், பின்னும் செல்பவர்களுக்கு தான் விபத்து ஏற்படுகிறது. பெண்கள் வாகனங்களை பாதுகாப்பாக ஓட்ட வேண்டும். கல்லூரிகளுக்கு இருசக்கர வாகனம் கொண்டு வரும் பெரும்பாலான மாணவிகள் லைசன்ஸ் வைத்திருப்பதில்லை. எனவே, பெற்றோரிடம் தெரிவித்து உடனடியாக லைசன்ஸ் எடுக்க வேண்டும்.

பெண்கள் தான் நாட்டின் கண்கள். எப்போதும் பொறுமையானவர்கள். ஆனால், வாகனம் ஓட்டுவதில் மட்டும், பொறுமையை இழந்து விடுகின்றனர். சாலை பாதுகாப்பு வார விழா கொண்டாடி வரும் நிலையில், விபத்து ஏற்படுத்தாமல் வாகனம் ஓட்டுவது குறித்து உங்கள் தந்தை, சகோதரர்களுக்கு எடுத்து கூற வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

இதில் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர்கள் ரமேஷ், சரவணன், ஏட்டுக்கள் கவிதா, பாபு உட்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் கல்லூரி துணை முதல்வர் சுகுணா நன்றி கூறினார்.

# கல்லூரி, பள்ளிகளில் குடியரசு தின விழா

**வந்தவாசி/ஆரணி/செங்கம்/செய்யாறு, ஜன26:** மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள பள்ளி, கல்லூரிகளில் குடியரசு தின விழா சனிக்கிழமை கொண்டாடப்பட்டது.

வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற விழாவில் கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம் தேசியக் கொடியேற்றினார். கல்லூரிச் செயலர் எம்.ரமணன், கல்லூரி முதல்வர் எஸ்.மைதிலி, ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்வியியல் கல்லூரி முதல்வர் வி.நிமாவதி உள்ளிட்டோர் பங்கேற்றனர். கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்ற மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.





வந்தவாசி ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற குடியரசு தின விழா கலை நிகழ்ச்சி.
(வலது) ஆரணி டாக்டர் எம்ஜிஆர் சொக்கலிங்கம் கலைக் கல்லூரியில் தேசியக் கொடியேற்றி சிறப்புரையாற்றிய கல்லூரி முதல்வர் கோ.சுகுமாறன்.

வந்தவாசியை அடுத்த வங்காரத்தில் உள்ள ஹாஷினி இன்டர்நேஷனல் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற விழாவில், பள்ளி இயக்குநர் வி.இராஜேந்திரன் தேசியக் கொடியேற்றினார். பள்ளி முதல்வர் ஆர்.வி.பிரவீன்குமார், துணை முதல்வர் பி.முருகன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

வந்தவாசியை அடுத்த டி.மாம்பட்டு கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் நடைபெற்ற விழாவில், தெள்ளாறு சுவாமி அபேதானந்தா பாலிடெக்னிக் கல்லூரி இயக்குநர் எஸ்.ரஷ்யராஜ் தேசியக் கொடியேற்றினார். பள்ளித் தலைமை ஆசிரியை கலைவாணி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**சேத்துப்பட்டு:** சேத்துப்பட்டு - செஞ்சி சாலையில் உள்ள திவ்யா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றவிழாவில்பள்ளித்தாளாளர் பா.செல்வராசன் தலைமை வகித்தார். செயலர் டாக்டர் செந்தில்குமார், துணைத் தலைவர் பொறியாளர் பிரவீன்குமார், திவ்யா கல்வி நிறுவனங்களின் நிர்வாக அலுவலர் பிரதாபன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆசிரியர் திருமால் வரவேற்றார்.

தேசியக்கொடியை பள்ளி முதல்வர் முரளி, ஏற்றி வைத்து சிறப்புரையாற்றினார். விழாவில், மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. துணை முதல்வர் சுரேஷ் நன்றி கூறினார்.

ஆரணி டாக்டர் எம்ஜிஆர் சொக்கலிங்கம் கலைக் கல்லூரியில் நடைபெற்ற விழாவுக்கு கல்லூரிச் செயலர் ஏ.சி.ரவி தலைமை வகித்தார். கல்லூரி முதல்வர் கோ.சுகுமாறன் தேசியக் கொடியேற்றி, சிறப்புரை ஆற்றினார்.

நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் கா.கிருஷ்ணமூர்த்தி வரவேற்றார். பிற துறைத் தலைவர்கள் பிரபு, சம்புவராயன், கணபதி, நந்தகுமார், அலுவலக ஊழியர் ஏ.ஆனந்தன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

**செய்யாறு:** செய்யாறு விஸ்டம் வித்யாஷ்ரம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற விழாவுக்கு விஸ்டம் கல்வி அறக்கட்டளைத் தலைவர் டி.ஜி.மணி தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினராக செய்யாறு அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி கணிதத் துறைத் தலைவர் மூர்த்தி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியின்போது, தேசப்பற்றை விளக்கும் வகையில், பள்ளி மாணவர்கள் பங்கேற்ற கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதில், என்.துரைராஜன், வழக்குரைஞர் புரிசை.சிவக்குமார், பள்ளி முதல்வர் பிரியா, இணை முதல்வர் மு.வஹிதா மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

**செங்கம்:** செங்கத்தை அடுத்த குருமப்பட்டி அரசு தொடக்கப் பள்ளியில் நடைபெற்ற விழாவில், பெற்றோர் - ஆசிரியர் கழகத் தலைவர் சடையன் தேசியக் கொடியேற்றி இனிப்பு வழங்கினார். நிகழ்ச்சியில் பள்ளித் தலைமை ஆசிரியர் சிவராமன், ஆசிரியர் சுடலைப்பாண்டி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

ஞாயிற்றுக்கிழமை, 27 ஜனவரி 2019
தினமணி

தினமணி



# மரக்கன்று நடும் விழா




மழையூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் மரக்கன்று நடுகிறார் பள்ளித் தலைமை ஆசிரியர் வி.நீலகண்டன்.

வந்தவாசி, பிப்.12: வந்தவாசியை அடுத்த மழையூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் மரக்கன்று நடும் விழா திங்கள்கிழமை நடைபெற்றது.

வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியின் நாட்டு நலப் பணித் திட்டம் அலகு - 1, அலகு - 2 சார்பில், இந்தப் பள்ளியில் 7 நாள் சிறப்பு முகாம் நடைபெற்று வருகிறது. இதையொட்டி, பள்ளியில் மரக்கன்று நடும் விழா நடைபெற்றது. பள்ளித் தலைமை ஆசிரியர் வி.நீலகண்டன், பள்ளி வளாகத்தில் மரக்கன்றுகளை நட்டார். மேலும், அந்தக் கிராமத்தில் உள்ள கோயில் வளாகங்களை மாணவிகள் தூய்மைப்படுத்தினர். இதில், கல்லூரி நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் கி.வரலட்சுமி, கல்லூரி இளம் அரிமா சங்கத் தலைவர் எம்.காயத்திரி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தினபூமி, வேலூர்
பிப்ரவரி 16, 2019

# வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி வேதியியல் துறையின் சார்பாக பன்னாட்டு பயிற்சிப்பட்டறை



வந்தவாசி,பிப்.16-

வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் வேதியியல் துறையின் சார்பாக பன்னாட்டு பயிற்சிப்பட்டறை நடைபெற்றது. பயிற்சி பட்டறைக்கு கல்லூரி நிறுவனர். பி.முனிரத்தினம் அவர்கள் . தலைமை தாங்கினார். கல்லூரியின் செயலர் மற்றும் திருவள்ளுவர் ஆட்சி மன்ற குழு உறுப்பினர் மு.ரமணன் அவர்கள் முன்னிலை வகித்தார். : இக்கல்லூரியின் பேராசிரியர் வி.செல்வராஜ் ; அவர்கள் கருத்தரங்கின் நோக்கம் குறித்து சிறப்புரை கூறினார். துறைத்தலைவி ஏ.ஷோபா வரவேற்புரை ஆற்றினார். கருத்தரங்கில் முனைவர் பி..வெங்கடேசன், ஆராய்ச்சியாளர், வேதியியல் துறை என்சிஎச் பல்கலைகழகம், தைவான் அவர்கள் கலந்துக் கொண்டு புற்றுநோய் சிகிச்சையில், நேனோ துகள்களின் பயன்பாடுகள் குறித்து சிறப்புரை ஆற்றினார். இதில் 250 மாணவிகள் கலந்து கொண்டனர். பேராசிரியர் டி.பிரகாஷ் அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

தினமணி

வெள்ளிக்கிழமை, 11 ஜனவரி 2019

# மதுவின் தீமைகள் குறித்த விழிப்புணர்வு ஊர்வலம்



ஊர்வலத்தை கொடியசைத்து தொடக்கிவைத்த மாவட்டக் கலால் உதவி ஆணையர் எம்.எஸ்.பாலதண்டாயுதபாணி.

வந்தவாசி, ஜன.10: மது விலக்கு, ஆயத்தீர்வைத் துறை சார்பில், மது அருந்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்த விழிப்புணர்வு ஊர்வலம் வந்தவாசியில் வியாழக்கிழமை நடைபெற்றது.

ஊர்வலத்துக்கு வந்தவாசி சமூகப் பாதுகாப்புத் திட்ட வட்டாட்சியர் சுபாஷ் தலைமை வகித்தார். திருவண்ணாமலை மாவட்டக் கலால் உதவி ஆணையர் எம்.எஸ்.பாலதண்டாயுதபாணி கொடியசைத்து ஊர்வலத்தை தொடக்கிவைத்தார்.

ஊர்வலத்தில், துணை வட்டாட்சியர் குமரவேல், வருவாய் ஆய்வாளர் அருணாச்சலம் மற்றும் வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி மாணவிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தினமணி
ஞாயிற்றுக்கிழமை, 27 ஜனவரி 2019

# கல்லூரி, பள்ளிகளில் குடியரசு தின விழா

**வந்தவாசி/ஆரணி/செங்கம்/செய்யாறு, ஜன26:** மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள பள்ளி, கல்லூரிகளில் குடியரசு தின விழா சனிக்கிழமை கொண்டாடப்பட்டது.

வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற விழாவில் கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம் தேசியக் கொடியேற்றினார். கல்லூரிச் செயலர் எம்.ரமணன், கல்லூரி முதல்வர் எஸ்.மைதிலி, ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்வியியல் கல்லூரி முதல்வர் வி.நிமாவதி உள்ளிட்டோர் பங்கேற்றனர். கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்ற மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.





வந்தவாசி ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற குடியரசு தின விழா கலை நிகழ்ச்சி.
(வலது) ஆரணி டாக்டர் எம்ஜிஆர் சொக்கலிங்கம் கலைக் கல்லூரியில்
தேசியக் கொடியேற்றி சிறப்புரையாற்றிய கல்லூரி முதல்வர் கோ.சுகுமாறன்.

வந்தவாசியை அடுத்த வங்காரத்தில் உள்ள ஹாஷினி இன்டர்நேஷனல் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற விழாவில், பள்ளி இயக்குநர் வி.இராஜேந்திரன் தேசியக் கொடியேற்றினார். பள்ளி முதல்வர் ஆர்.வி.பிரவீன்குமார், துணை முதல்வர் பி.முருகன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

வந்தவாசியை அடுத்த டி.மாம்பட்டு கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் நடைபெற்ற விழாவில், தெள்ளாறு சுவாமி அபேதானந்தா பாலிடெக்னிக் கல்லூரி இயக்குநர் எஸ்.ரஷ்யராஜ் தேசியக் கொடியேற்றினார். பள்ளித் தலைமை ஆசிரியை கலைவாணி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**சேத்துப்பட்டு:** சேத்துப்பட்டு - செஞ்சி சாலையில் உள்ள திவ்யா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றவிழாவில்பள்ளித்தாளாளர் பா.செல்வராசன் தலைமை வகித்தார். செயலர் டாக்டர் செந்தில்குமார், துணைத் தலைவர் பொறியாளர் பிரவீன்குமார், திவ்யா கல்வி நிறுவனங்களின் நிர்வாக அலுவலர் பிரதாபன் ஆகியோர் முன்னிலைவகித்தனர். ஆசிரியர் திருமால்வரவேற்றார்.

தேசியக்கொடியை பள்ளி முதல்வர் முரளி, ஏற்றி வைத்து சிறப்புரையாற்றினார். விழாவில், மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. துணை முதல்வர் சுரேஷ் நன்றி கூறினார்.

ஆரணி டாக்டர் எம்ஜிஆர் சொக்கலிங்கம் கலைக் கல்லூரியில் நடைபெற்ற விழாவுக்கு கல்லூரிச் செயலர் ஏ.சி.ரவி தலைமை வகித்தார். கல்லூரி முதல்வர் கோ.சுகுமாறன் தேசியக் கொடியேற்றி, சிறப்புரை ஆற்றினார்.

நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் கா.கிருஷ்ணமூர்த்திவரவேற்றார். பிற துறைத்தலைவர்கள் பிரபு, சம்புவராயன், கணபதி, நந்தகுமார், அலுவலக ஊழியர் ஏ.ஆனந்தன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

**செய்யாறு:** செய்யாறு விஸ்டம் வித்யாஷ்ரம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற விழாவுக்கு விஸ்டம் கல்வி அறக்கட்டளைத் தலைவர் டி.ஜி.மணி தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினராக செய்யாறு அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி கணிதத் துறைத் தலைவர் மூர்த்தி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியின்போது, தேசப்பற்றை விளக்கும் வகையில், பள்ளி மாணவர்கள் பங்கேற்ற கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதில், என்.துரைராஜன், வழக்குரைஞர் புரிசை.சிவக்குமார், பள்ளி முதல்வர் பிரியா, இணை முதல்வர் மு.வஹிதா மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

**செங்கம்:** செங்கத்தை அடுத்த குருமப்பட்டி அரசு தொடக்கப் பள்ளியில் நடைபெற்ற விழாவில், பெற்றோர் - ஆசிரியர் கழகத் தலைவர் சடையன் தேசியக் கொடியேற்றி இனிப்பு வழங்கினார். நிகழ்ச்சியில் பள்ளித் தலைமை ஆசிரியர் சிவராமன், ஆசிரியர் சுடலைப்பாண்டி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தினபூமி, வேலூர்
பிப்ரவரி 16, 2019

# வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி வேதியியல் துறையின் சார்பாக பன்னாட்டு பயிற்சிப்பட்டறை



வந்தவாசி,பிப்.16-

வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் வேதியியல் துறையின் சார்பாக பன்னாட்டு பயிற்சிப்பட்டறை நடைபெற்றது. பயிற்சி பட்டறைக்கு கல்லூரி நிறுவனர். பி.முனிரத்தினம் அவர்கள் . தலைமை தாங்கினார். கல்லூரியின் செயலர் மற்றும் திருவள்ளுவர் ஆட்சி மன்ற குழு உறுப்பினர் மு.ரமணன் அவர்கள் முன்னிலை வகித்தார். : இக்கல்லூரியின் பேராசிரியர் வி.செல்வராஜ் ; அவர்கள் கருத்தரங்கின் நோக்கம் குறித்து சிறப்புரை கூறினார். துறைத்தலைவி ஏ.ஷோபா வரவேற்புரை ஆற்றினார். கருத்தரங்கில் முனைவர் பி..வெங்கடேசன், ஆராய்ச்சியாளர், வேதியியல் துறை என்சிஎச் பல்கலைகழகம், தைவான் அவர்கள் கலந்துக் கொண்டு புற்றுநோய் சிகிச்சையில், நேனோ துகள்களின் பயன்பாடுகள் குறித்து சிறப்புரை ஆற்றினார். இதில் 250 மாணவிகள் கலந்து கொண்டனர். பேராசிரியர் டி.பிரகாஷ் அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

தினமணி

வெள்ளிக்கிழமை, 15 பிப்ரவரி 2019

# கல்லூரியில் பயிற்சி முகாம்

**வந்தவாசி, பிப்.14:** வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் வேதியியல் துறை சார்பில், பன்னாட்டு பயிற்சி முகாம் வியாழக்கிழமை நடைபெற்றது.

கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம் தலைமை வகித்தார். கல்லூரிச் செயலர் எம்.ரமணன் முன்னிலை வகித்தார். கல்லூரி வேதியியல் துறைத் தலைவர் எ.ஷோபா வரவேற்றார்.

தைவான் என்.சி.எச். பல்கலைக்கழக வேதியியல் துறை ஆராய்ச்சியாளர் முனைவர் பி.வெங்கடேசன் சிறப்புரை ஆற்றினார். கல்லூரிப் பேராசிரியர்கள் வி.செல்வராஜ், டி.பிரகாஷ் மற்றும் மாணவிகள் பங்கேற்றனர்.

தினமணி

திங்கள்கிழமை, 25 பிப்ரவரி 2019

# கல்லூரியில் கருத்தரங்கம்




நிகழ்வில் கருத்தரங்க மலரை வெளியிட்ட சிறப்பு விருந்தினர்கள்.

**வந்தவாசி, பிப். 24:** வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் கணிதத் துறை சார்பில், தேசிய அளவிலான கருத்தரங்கம் வெள்ளிக்கிழமை தொடங்கி 2 நாள்கள் நடைபெற்றது.

கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம் தலைமை வகித்தார். கல்லூரிச் செயலர் எம்.ரமணன் முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் எஸ்.மைதிலி வரவேற்றார்.

ஆந்திர மாநிலம், குப்பம் பகுதியில் உள்ள திராவிடன் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பி.வி.அருணாச்சலம், வேலூர் திருவள்ளுவர் பல்கலைக்கழக கணிதத் துறைத் தலைவர் ஜி.தங்கராஜ், பேராசிரியர் எம்.சித்ரா, திருப்பதி ஸ்ரீவெங்கடேஸ்வரா பல்கலைக்கழக வளர்ச்சி பிரிவுத் தலைவர் எஸ்.ஸ்ரீநாத், புதுவை மத்திய பல்கலைக்கழகப் பேராசிரியர் எஸ்.ஆர்.கண்ணன், வேலூர் டி.கே.எம். கல்லூரியின் முன்னாள் முதல்வர் ஆர்.மணிமேகலை ஆகியோர் சிறப்புரையாற்றினர். கருத்தரங்கில் 12 கல்லூரிகளைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் பங்கேற்றனர். கல்லூரி கணிதத் துறை தலைவர் ஈ.கலைவாணி நன்றி கூறினார்.

சனிக்கிழமை, 26 ஜனவரி 2019

தினமணி

# தேசிய வாக்காளர் தின விழிப்புணர்வு நிகழ்ச்சி





வந்தவாசியில் நடைபெற்ற தேசிய வாக்காளர் தின விழிப்புணர்வு ஊர்வலம்.
(வலது) போளூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் வட்டார வளர்ச்சி அலுவலர் கிருஷ்ணமூர்த்தி தலைமையில் தேசிய வாக்காளர் தின உறுதிமொழி ஏற்ற அலுவலர்கள்.

தினமணி

சனிக்கிழமை, 2 மார்ச் 2019

# தேசிய அறிவியல் தின விழா



விழாவில் பேசுகிறார் வேலூர் டி.கே.எம். கல்லூரியின் விலங்கியல் துறைத் தலைவர் கே.தேவி.

**வந்தவாசி, மார்ச் 1:** வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் தேசிய அறிவியல் தின விழா வியாழக்கிழமை நடைபெற்றது.

கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம் தலைமை வகித்தார். கல்லூரிச் செயலர் எம்.ரமணன் முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் எஸ்.மைதிலி வரவேற்றார்.

வேலூர் டி.கே.எம். கல்லூரியின் விலங்கியல் துறைத் தலைவர் கே.தேவி சிறப்புரை ஆற்றினார். மேலும், மாணவிகள் காட்சிக்கு வைத்திருந்த அறிவியல் படைப்புகளை அவர் பார்வையிட்டார். கல்லூரி உயிரி வேதியியல் துறைத் தலைவர் கே.பத்மலோச்சனா நன்றி தெரிவித்தார்.

தினமணி

வெள்ளிக்கிழமை, 1 மார்ச் 2019

# கல்லூரியில் தேசிய அளவிலான கருத்தரங்கம்



கருத்தரங்க மலரை வெளியிட்ட சிறப்பு விருந்தினர்கள்.

வந்தவாசி, பிப்.28: வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் ஆங்கிலத் துறை சார்பில், தேசிய அளவிலான கருத்தரங்கம் புதன்கிழமை நடைபெற்றது.

கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம் தலைமை வகித்தார். கல்லூரிச் செயலர் எம். ரமணன் முன்னிலை வகித்தார். கல்லூரி துணை முதல்வர் கே.சுகுணா வரவேற்றார்.

வேலூர் திருவள்ளுவர் பல்கலைக்கழகப் பதிவாளர் வி.பெருவழுதி, வேலூர் டி.கே.எம். கல்லூரியின் முன்னாள் முதல்வர் கே.ரேவதி, சென்னை நியூ கல்லூரிப் பேராசிரியர் அன்வர் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

கருத்தரங்கில் பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் பங்கேற்றனர். கல்லூரி ஆங்கிலத் துறைப் பேராசிரியை வி.சரண்யா நன்றி கூறினார்.

மாலை முரசு

25-02-2019

வந்தவாசி

# மகளிர் கல்லூரியில் தேசிய கருத்தரங்கம்!

வந்தவாசி, பிப்,25–

வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் கணித துறை சார்பில் தேசிய அளவிலான 2 நாள் கருத்தரங்கம் நிகழ்ச்சி நடைபெற்றது. கல்லூரி நிறுவனர் பி. முனிரத்தினம் தலைமை தாங்கினார் கல்லூரி செயலாளர் எம்.ரமணன் முன்னிலை வகித்தார் அனைவரையும் கல்லூரி முதல்வர் முனைவர் எஸ்.மைதிலி வரவேற்றார்

இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளர்களாக ஆந்திர மாநிலம் குப்பம் திராவிடப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பி.வி.அருணாச்சலம் திருவள்ளுவர் பல்கலைக் கழக ஆட்சி மன்ற குழு உறுப்பினரும் பல்கலைக்கழக கணித துறை தலைவருமான முனைவர் ஜி.தங்கராஜ் மற்றும் திருப்பதி ஸ்ரீ வெங்கடேஸ்வரா பல்கலைக்கழத்தின் வளர்ச்சி பிரிவின் முனைவர் எஸ்.ஸ்ரீநாத் ஆகியோர் கலந்துகொண்டு கணிதத்துறையில் உள்ள வெவ்வேறு பிரிவுகளின் கீழ் சிறப்புரையாற்றினர் இரண்டாம் நாள் நடைபெற்றநிகழ்ச்சியில் புதுவை [illegible] பல்கலைக்கழகத் வள்ளுவர் பல்கலைக்கழகத்தின் கணிதத் துறை இணை பேராசிரியர் முனைவர் எம்.சித்ரா வேலூர் டி.கே.எம் கல்லூரியின் முன்னாள் முதல்வர் ஆர். மணிமேகலை கலந்து கொ ண் டு சிறப்புரையாற்றினர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாணவிகள் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கினர் சிறப்பாக செயல்பட்ட மாணவிகள் 3 பேருக்கு சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கப்பட்டன இந்தக் கருத்தரங்க நிகழ்ச்சியில் 12க்கும் மேற்பட்ட கல்லூரிகளில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர் முடிவில் கல்லூரி கணிதத் துறை தலைவி கலைவாணி நன்றி கூறினார்

தினத்தந்தி

7-3-2019




வந்தவாசி அகிலாண்டேஸ்வரி

# மகளிர் கல்லூரியில் முத்தமிழ் விழா

வந்தவாசி, மார்ச்.7-

வந்தவாசி ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் 24-ம் ஆண்டு முத்தமிழ் விழா நடந்தது. விழாவிற்கு கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம் தலைமை தாங்கினார். கல்லூரிச் செயலாளர் எம்.ரமணன், முதல்வர் எஸ்.மைதிலி ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழ்த்துறை உதவிப்பேராசிரியை ஏ.கலைவாணி வரவேற்று பேசினார், உதவிப்பேராசிரியை கி.வரலட்சுமி ஆண்டறிக்கை வாசித்தார்.

விழாவில் பட்டிமன்ற நடுவர் பேராசிரியர் எம்.ராமச்சந்திரன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். அரிமா சங்க முன்னாள் மாவட்ட ஆளுனர் வி.எஸ்.தளபதி பேசினார். விழாவையொட்டி நடந்த இலக்கிய போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மாணவிகளுக்கும், பல்துறை போட்டிகளில் வெற்றி பெற்ற கல்லூரி மாணவிகளுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. முடிவில் தமிழ்த்துறை பேராசிரியை த.வெண்ணிலா நன்றி கூறினார்.

**தினத்தந்தி**

**12-2-2019**



## அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி சார்பில்

# நாட்டு நலப்பணித்திட்ட முகாம்

வந்தவாசி, பிப்.12-

வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி சார்பில் நாட்டு நலப்பணித்திட்ட முகாம் தொடக்க விழா வந்தவாசி அருகே மழையூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் நடந்தது. கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம் கலந்து கொண்டு முகாமை தொடங்கி வைத்தார். கல்லூரி செயலாளர் எம்.ரமணன், கல்லூரி முதல்வர் எஸ்.மைதிலி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் செய்யாறு அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி வரலாற்றியல் துறைத்தலைவர் மாரிமுத்து, வந்தவாசி தாசில்தார் எஸ்.ஹரிக்குமார், சமூக நலபாதுகாப்பு தாசில்தார் சுபாஷ்சுந்தர், தெள்ளார் ஒன்றிய ஆணையாளர் எஸ்.மோகன் உள்பட பலர் கலந்து கொண்டு பேசினர்.

இதைத்தொடர்ந்து கல்லூரி நூலகர் கே.கலாராணி கலந்து கொண்டு பெண் தொழில் முனைவோருக்கான கம்ப்யூட்டர் சாம்பிராணி மற்றும் சலவைத்தூள் தயாரிக்கும் செய்முறை விளக்கங்களை அளித்தார். இதில் மழையூரைச் சேர்ந்த பெண்களும், பள்ளி மாணவர்களும், திட்ட மாணவிகளும் கலந்து கொண்டனர்.

தினமலர் வேலூர் வியாழன் மார்ச் 7, 2019




வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி 24ம் ஆண்டு முத்தமிழ் விழாவில் பட்டிமன்ற பேச்சாளர் மதுரை ராமச்சந்திரன் பங்கேற்று, தமிழ் விழா போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கினார். உடன் கல்லூரி செயலாளர் ரமணன், லயன்ஸ் கிளப் முன்னாள் ஆளுநர் தளபதி, முதல்வர் மைதிலி ஆகியோர்.

# அகிலாண்டேஸ்வரி கல்லூரியில் 24ம் ஆண்டு முத்தமிழ் விழா

வந்தவாசி, மார்ச் 7–

*வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் 24ம் ஆண்டு முத்தமிழ் விழா நடந்தது.*

நிகழ்ச்சிக்கு, கல்லூரி நிறுவனர் முனிரத்தினம் தலைமை வகித்தார். செயலாளர் மற்றும் திருவள்ளுவர் பல்கலைக்கழக ஆட்சிமன்றக்குழு உறுப்பினர் ரமணன், லயன்ஸ் கிளப் முன்னாள் ஆளுநர் தளபதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தமிழ்த்துறை பேராசிரியை கலைவாணி வரவேற்றார். உதவி பேராசிரியை வரலட்சுமி ஆண்டறிக்கை வாசித்தார். முதல்வர் மைதிலி தலைமை உரையாற்றினார்.

சிறப்பு விருந்தினராக பங்கேற்ற பட்டிமன்ற பேச்சாளர் மதுரை ராமச்சந்திரன், 'தமிழ்மொழியின் சிறப்புக்கள்', 'தமிழ் இலக்கியங்கள் மனதையும், வாழ்வியலையும் செம்மைப்படுத்தும்', 'தமிழ் ஆற்றல்', 'மாணவிகள் பட்டம் பெறுவதுடன், பண்புகளையும் பெறவேண்டும்' ஆகிய தலைப்புகளில் பேசினார்.

தொடர்ந்து, முத்தமிழ் விழாவை முன்னிட்டு பள்ளி, கல்லூரி மாணவிகளுக்கு இடையே நடத்தப்பட்ட பல இலக்கியப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளை வாழ்த்தி, சிறப்பு விருந்தினர் மதுரை ராமச்சந்திரன் பரிசுகளை வழங்கினார்.

தமிழ்த்துறை உதவி பேராசிரியை வெண்ணிலா நன்றி கூறினார்.

தினத்தந்தி

7-3-2019

# ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி



(Re-Accredited with A Grade By NAAC) - (Recognised under Section 2 (f) & 12 (B) of UGC Act)
(Permanent Affiliation Granted by Thiruvalluvar University-Vellore)

திண்டிவனம் சாலை, **வந்தவாசி** - 604 408, திருவண்ணாமலை மாவட்டம்

## 24-ஆம் ஆண்டு

# கல்லூரி தின விழா - 2019



நாள் : 07-03-2019 வியாழக்கிழமை
நேரம் : காலை 10-30 மணி, இடம் : கல்லூரி அரங்கம்

**சிறப்பு விருந்தினர்**

கும்கி படப்புகழ் நடிகர், கவிஞர்

திரு. **ஜோ.மல்லூரி** அவர்கள்

— அனைவரும் வருக! வருக!! —

**நிறுவனர், செயலர், முதல்வர்,**

பேராசிரியர்கள், ஆசிரியரல்லாப் பணியாளர்கள் மற்றும் மாணவிகள்

**சுவாமி அபேதானந்தா கல்வி அறக்கட்டளை, வந்தவாசி**

தினத்தந்தி

8-3-2019


# ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி, வந்தவாசி



மற்றும்

## செய்யாறு வட்ட சட்டப் பணிகள் குழு சார்பில்

# உலக மகளிர் தின விழா - 2019

நாள் : 08-03-2019 வெள்ளிக்கிழமை
நேரம் : பிற்பகல் 2.00 மணி, இடம் : கல்லூரி அரங்கம்

**சிறப்பு விருந்தினர்கள்**

திருமதி. **C.ஜெயஸ்ரீ** B.A.,B.L.,அவர்கள்
சார்பு நீதிபதி, செய்யாறு

திரு. **M.ஜெயசங்கர்** M.A.,B.L.அவர்கள்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, செய்யாறு

திரு. **T.மோகன்குமார்** B.Com.,B.L.அவர்கள்
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, செய்யாறு

திரு. **C.சுந்தரபாண்டியன்** B.Com.,B.L.அவர்கள்
குற்றவியல் நீதித்துறை நடுவர், செய்யாறு

அனைவரும் வருக! வருக!!

**நிறுவனர், செயலர், முதல்வர்,**
பேராசிரியர்கள், ஆசிரியரல்லாப் பணியாளர்கள் மற்றும் மாணவிகள்

**சுவாமி அபேதானந்தா கல்வி அறக்கட்டளை, வந்தவாசி**

தினமணி

★★★ வெள்ளிக்கிழமை, 8 மார்ச் 2019

# கல்லூரி தின விழா




விழாவில் மாணவிக்கு பரிசு வழங்குகிறார் திரைப்பட நடிகரும், கவிஞருமான ஜோ.மல்லூரி.

**வந்தவாசி, மார்ச் 7:** வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் 24-ஆம் ஆண்டு கல்லூரி தின விழா வியாழக்கிழமை நடைபெற்றது.

விழாவுக்கு கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம் தலைமை வகித்தார். கல்லூரிச் செயலர் எம்.ரமணன் முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் எஸ்.மைதிலி வரவேற்றார்.

திரைப்பட நடிகரும், கவிஞருமான ஜோ.மல்லூரி சிறப்புரை ஆற்றினார். தனது திரைப்பட அனுபவங்கள் குறித்து அவர் விளக்கிப் பேசினார். மேலும், கடந்த பருவத் தேர்வுகளில் சிறப்பிடம் பெற்ற மாணவிகளுக்கு அவர் பரிசுகளை வழங்கினார். அரிமா சங்க முன்னாள் மாவட்ட ஆளுநர் வி.எஸ்.தளபதி, கல்லூரி துணை முதல்வர் கே.சுகுணா உள்ளிட்டோர் பங்கேற்றனர். கல்லூரி இயற்பியல் துறைத் தலைவர் செல்வகுமார் நன்றி கூறினார்.

தினமணி

சனிக்கிழமை, 9 மார்ச் 2019




வந்தவாசி: வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி, செய்யாறு வட்ட சட்டப் பணிகள் குழு சார்பில், உலக மகளிர் தின விழா கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. விழாவுக்கு கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம் தலைமை வகித்தார். கல்லூரிச் செயலர் எம்.ரமணன் முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் எஸ்.மைதிலி வரவேற்றார்.

செய்யாறு சார்பு நீதிபதி சி.ஜெயஸ்ரீ, செய்யாறு முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி எம்.ஜெயசங்கர் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். மகளிர் தினம் குறித்து நடைபெற்ற பேச்சுப் போட்டிகளில் சிறப்பிடம் பெற்ற மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. கல்லூரி துணை முதல்வர் கே.சுகுணா, கல்லூரி கணினி பயன்பாட்டுத் துறைத் தலைவர் எஸ்.சத்தியகலா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தினமலர் வேலூர் சனி மார்ச் 9 2019



வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் நடந்த மகளிர் தினவிழாவில் செய்யாறு சார்பு நீதிபதி ஜெயஸ்ரீ மகளிர் தினம் குறித்து பேசிய மாணவிகளுக்கு பரிசு வழங்கினார். உடன் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி ஜெய்சங்கர், கல்லூரி நிறுவனர் முனிரத்தினம். முதல்வர் மைதிலி ஆகியோர்.

# அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் மாணவிகளுக்கு பரிசு வழங்கினார் நீதிபதி

வந்தவாசி, மார்ச் 9–

வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் உலக மகளிர் தினவிழா, செய்யாறு வட்ட சட்டப்பணிகள் விழிப்புணர்வு முகாம் நேற்று நடந்தது.

கல்லூரி நிறுவனர் முனிரத்தினம் தலைமை வகித்தார். செயலர் மற்றும் திருவள்ளுவர் பல்கலைக்கழக ஆட்சி மன்றக்குழு உறுப்பினர் ரமணன், லயன்ஸ் கிளப் முன்னாள் கவர்னர் தளபதி முன்னிலை வகித்தனர். முதல்வர் மைதிலி வரவேற்றார்.

விழாவில் சிறப்பு விருந்தினராக செய்யாறு சார்பு நீதிபதி ஜெயஸ்ரீ, முதன்மை மாவட்ட நீதிபதி ஜெய்சங்கர் ஆகியோர் பங்கேற்று மகளிர் தினத்தின் சிறப்புகள், பெண்கள் எவ்வாறெல்லாம் நடந்து கொள்ள வேண்டும், பெண் கல்வி, மாணவிகள் கடைபிடிக்க வேண்டிய ஆளுமைத்திறன், சட்ட விழிப்புணர்வு, வேலை வாய்ப்புகள், குடும்பம் உள்ளிட்ட தலைப்புகளில் பேசினர். இதையடுத்து திருவள்ளுவர் பல்கலைக்கழக கல்விக்குழு உறுப்பினர் சுகுணா உள்ளிட்ட பேராசிரியர்கள் பலரும் பேசினர்.

மகளிர் தினம் குறித்து பேசிய மாணவிகளை வாழ்த்தி சிறப்பு விருந்தினர் ஜெயஸ்ரீ பரிசுகளை வழங்கினார். கணினி பயன்பாட்டுத் துறை தலைவர் சத்தியகலா நன்றி கூறினார்.

தினகரன்

9.3.2019

## அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில்

# 24ம் ஆண்டு கல்லூரி தினவிழா

### நடிகர் பங்கேற்பு




வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் நடந்த விழாவில் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு நடிகர் ஜோ.மல்லூரி பரிசு வழங்கினார். உடன் திருவள்ளுவர் பல்கலைக்கழக ஆட்சிமன்ற குழு உறுப்பினர் எம்.ரமணன், கல்லூரி முதல்வர் எஸ்.மைதிலி.

வந்தவாசி, மார்ச் 9: வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் 24ம் ஆண்டு கல்லூரி தினவிழா நேற்று முன்தினம் கல்லூரி வளாகத்தில் உள்ள பாலகிருஷ்ணன் நாயுடு- ரேணு அம்மாள் அரங்கில் நடந்தது.

நிகழ்ச்சிக்கு கல்லூரி நிறுவனர் பா.முனிரத்தினம் தலைமை தாங்கினார். கல்லூரி செயாளரும், வேலூர் திருவள்ளுவர் பல்கலைக்கழக ஆட்சிமன்ற குழு உறுப்பினருமான எம்.ரமணன் முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் எஸ்.மைதிலி வரவேற்றார்.

இதில், கும்கி பட நடிகர் ஜோ.மல்லூரி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசு வழங்கி, நாட்டில் பெண்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும். பெண்ணின் சிறப்புகள் குறித்து விளக்கினார்.

இதில் லயன்ஸ் சங்க முன்னாள் மாவட்ட ஆளுனர் எஸ்.தளபதி, கல்லூரி துணை முதல்வர் கே.சுகுணா உட்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் இயற்பியல் துறை தலைவர் கே.செல்வகுமார் நன்றி கூறினார்.

மருவூர் டைம்ஸ்



# வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் முத்தமிழ் விழாவில் இலக்கிய போட்டி

வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற முத் தமிழ் விழாவில் இலக்கிய போட்டி களில் வெற்றி பெற்ற பள்ளி மாணவிக ளுக்கும் ஆசிரியர்களுக்கும் பல்துறைப் போட்டிகளில் வெற்றி பெற்ற கல்லூரி மாணவிகளுக்கு சிறப்பு பரிசுகளை பட்டி மன்ற பேச்சாளர் பேராசிரியர் மதுரை எம்.இராமசந்திரன் வழங்கினார்.

திருவண்ணாமலை மாவட்டம் வந்த வாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற முத்தமிழ் விழாவிற்கு கல்லூரி நிறுவனர் ப.முனி ரத்தினம் தலைமை தாங்கினார். கல்லூரி செயலரும் திருவள்ளுவர் பல்கலைகழக சின்டிகேட் உறுப்பினர் மு.ரமணன் முன்னிலை வகித்தார். தமி ழ்த்துறை உதவி பேராசிரியர் ஏ.கலை வாணி அனைவரையும் வரவேற்று பேசினார்.

தமிழ்த்துறை உதவி பேராசிரியர் கி.வரலட்சுமி ஆண்டறிக்கை வாசித்தார். கல்லூரி முதல்வர் முனைவர் எஸ்.மை திலி தலைமையுரை வழங்கினார். அரிமா சங்க முன்னாள் ஆளுநர் தளபதி வாழ்துறை வழங்கினார்.

பட்டிமன்ற பேச்சாளரும் பேராசிரி யர் மதுரை எம்.இராமசந்திரன் தமிழ் மொழிகளின் சிறப்புகளையும் தமிழ் இலக்கியங்கள் மனதையும் வாழ் விய யையும் செம்மைப்படுத்தும் ஆற்றல் குறித்தும் எடுத்துரைத்தும் மாணவிகள் பட்டம் பெறுவதுடன் பண்பும் பெற வேண்டும் என்று அறிவுறுத்தி பள்ளி மாணவிகளிடையே நடத்தப்பட்ட பல் வேறு இலக்கிய போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மாணவிகளுக்கும் ஆசிரி யர்களுக்கும் பல்துறைப் போட்டிக ளில் வெற்றி பெற்ற கல்லூரி மாணவிக ளுக்கு சிறப்பு பரிசுகளை வழங்கினார். தமிழ்துறை உதவி போரசிரியர் முனை வர் த.வெண்ணிலா நன்றி கூறினார்.



தினத்தந்தி

25-3-2019




வந்தவாசி

# அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் பட்டமளிப்பு விழா

வந்தவாசி, மார்ச்.25-
வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் 20-வது பட்டமளிப்பு விழா நடந்தது. கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம் தலைமை தாங்கினார். கல்லூரி செயலாளரும், வேலூர் திருவள்ளுவர் பல்கலைக்கழக ஆட்சி மன்றக்குழு உறுப்பினருமான எம்.ரமணன், கல்லூரி முதல்வர் எஸ்.மைதிலி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் புதுடெல்லி சுங்கத்துறை இணை ஆணையர் எஸ்.விஜயராணி கலந்து கொண்டு இளநிலை மாணவிகள் 785 பேருக்கும், முதுநிலை மாணவிகள் 141 பேருக்கும், ஆராய்ச்சி படிப்பு மாணவிகள் 48 பேருக்கும் என மொத்தம் 974 மாணவிகளுக்கு பட்டம் வழங்கினார்.

இதைத் தொடர்ந்து பல்கலைக் கழக அளவில் முதலிடம் பெற்ற 3 மாணவிகளுக்கு அவர்கள் கல்விபயின்ற காலத்தில் செலுத்திய கல்லூரி கட்டணம் முழுவதும் காசோலை மூலம் வெகுமதியாக வழங்கப்பட்டதுடன், பல்கலைக் கழக அளவில் முதல் 10 இடங்களை பெற்ற 33 மாணவிகளுக்கு வெள்ளி பதக்கங்கள் வழங்கப்பட்டன.

தினமணி

திங்கள்கிழமை, 25 மார்ச் 2019

# கல்லூரியில் பட்டமளிப்பு விழா




விழாவில் மாணவிக்கு பட்டம் வழங்கிய தில்லி சுங்கத் துறை இணை ஆணையர் எஸ்.விஜயராணி.

வந்தவாசி, மார்ச் 24: வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் 20-ஆவது பட்டமளிப்பு விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

விழாவுக்கு கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம் தலைமை வகித்தார். கல்லூரிச் செயலர் எம்.ரமணன் முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் எஸ்.மைதிலி வரவேற்றார். தில்லி சுங்கத் துறை இணை ஆணையர் எஸ்.விஜயராணி பட்டங்களை வழங்கி சிறப்புரை ஆற்றினார். விழாவில், 974 மாணவிகளுக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன.

தினமலர்

திங்கள் மார்ச் 25, 2019




வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் நடந்த பட்டமளிப்பு விழாவில் டில்லி கஸ்டம்ஸ் இணை கமிஷனர் விஜயராணி மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினார். அருகில் சிண்டிகேட் உறுப்பினர் ரமணன், முதல்வர் மைதிலி மற்றும் பேராசிரியர்கள்.

தினமலர் வேலூர் திங்கள் மார்ச் 25, 2019

தினமலர்

# கல்விச் செல்வத்தை படித்தால் மற்ற செல்வங்கள் தேடி வரும்!

## மாணவிகளுக்கு கஸ்டம்ஸ் அதிகாரி அறிவுரை

வந்தவாசி, மார்ச் 25–

*சிந்தனையை உயர்த்தினால் பல வேலை வாய்ப்புகள் தேடிவரும் என்று டில்லி கஸ்டம்ஸ் இணை கமிஷனர் கூறினார்.*

வந்தவாசி அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி 20ம் ஆண்டு பட்டமளிப்பு விழா கல்லூரி வளாகத்தில் நேற்று நடந்தது.

கல்லூரி நிறுவனர் முனிரத்தினம் தலைமை வகித்தார். வேலூர் திருவள்ளுவர் பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழு உறுப்பினர் ரமணன், அரிமா கிளப் முன்னாள் கவர்னர் தளபதி, தெள்ளாறு யூனியன் முன்னாள் தலைவர் சீனுவாசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முதல்வர் மைதிலி வரவேற்று, ஆண்டறிக்கை வாசித்தார்.

சிறப்பு விருந்தினராக டில்லி கஸ்டம்ஸ் இணை கமிஷனர் விஜயராணி பங்கேற்று 785 இளநிலை, 141 முது நிலை, 48 ஆராய்ச்சி மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கி பேசியதாவது;

படித்தவர்களுக்கு உயர்ந்த வேலை கிடைக்கிறது என்பதுதான் கல்வியின் அவசியத்தை உணர்த்துகிறது. இளம்வயதில் கல்லூரியில் படிக்கும்போதே கம்பெனிகளை தேடிச்சென்றோம். இப்போது கம்பெனிகளே நம்மைத்தேடி வருவதால் திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். வேலை வாய்ப்பு எல்லாருக்கும் காத்துக் கொண்டிருக்கிறது. படித்துக்கொண்டே நீங்கள் அடைய முயற்சிக்கும் எண்ணத்தை வளாக நேர்காணலில் பதிலளிக்க திறமையை வளர்த்துக் கொண்டிருக்க வேண்டும்.

நான் வாழ்க்கையில் நன்றாகத்தானே செய்து வந்தேன். 'வேலை வாய்ப்பில் மற்றவர்களுக்கு மட்டும் கிடைக்கும்போது நமக்கு கிடைக்கவில்லையே' என்ற எண்ண வேண்டாம். ஒரு கதவு அல்ல பல கதவுகள் தட்டும். சிந்தனையை உயர்த்தினால் பல வேலை வாய்ப்புகள் தேடிவரும்.

பெண் கல்வியின் அவசியம்தான் சமூகம் பாராட்டி முன்னேற்றப் பாதைக்கு அழைத்துச் செல்லும். பெற்றோர்கள் குழந்தைகளை பாராட்டி, அவர்களுக்கு ஊக்கம் கொடுத்து படிக்க வைக்க வேண்டும். கல்வி என்ற செல்வத்தை படித்தால் மற்ற செல்வங்கள் தானாகவே வரும். தகுதி என்பது உங்கள் நிலையை உயர்த்திச் செல்லும். பொறுப்பான பெண்கள் பலவேலைகளை செய்கிறார்கள். பெண் தெய்வமான துர்க்கையைப்போல் பல கைகளைக்கொண்டு பலவேலைகளை சுமந்து செய்வது பெண்கள்தான்.

எவ்வளவு வேலைகளை செய்தாலும் அவற்றை கடினமாக செய்யாமல் புன்னகையுடன் செய்பவள்தான் பெண். வல்லமை படைத்த பெண்கள் கடந்த காலங்களில் வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடந்தனர். ஆண்கள்தான் வெளியில் சென்று பல அனுபவங்களை பெற்றனர். இப்போது பெண்கள் வெளியில் சென்று பல்வேறு பணிகளை மேற்கொண்டிருப்பதால் பொறுப்பான பணிகளை சுமந்து வருகின்றனர். கவனத்தை சிதறவிடக்கூடாது. நம்மால் முடியும் என்ற நம்பிக்கை வேண்டும். குறிக்கோளை அடையும் வரையில் படித்துக்கொண்டே இருங்கள். வரும் காலத்தில் நீங்கள் படித்து பட்டங்களை பெறுவதுடன்நின்றுவிடாமல் உயர் அதிகாரிகளாக வளர்ந்து, உங்கள் ஜூனியர்களுக்கும் பட்டங்களை வழங்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

சனிக்கிழமை, 6 ஏப்ரல் 2019

தினமணி

# 100 சதவீத வாக்களிப்பை வலியுறுத்தி விழிப்புணர்வு ஊர்வலம்



ஊர்வலத்தின்போது, வந்தவாசி பழைய பேருந்து நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த பேருந்தில் 100 சதவீத வாக்களிப்பை வலியுறுத்தும் விழிப்புணர்வு ஸ்டிக்கரை ஒட்டிய வட்டாட்சியர் எஸ்.அரிக்குமார்.

வந்தவாசி, ஏப்.5: மக்களவைத் தேர்தலில் 100 சதவீத வாக்களிப்பை வலியுறுத்தி விழிப்புணர்வு ஊர்வலம் வந்தவாசியில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

வந்தவாசி வட்டாட்சியர் எஸ்.அரிக்குமார் கொடியசைத்து ஊர்வலத்தை தொடக்கிவைத்தார். வந்தவாசி வட்டாட்சியர் அலுவலக வளாகத்திலிருந்து தொடங்கிய ஊர்வலம், கோட்டை மூலை, பழைய பேருந்து நிலையம், பஜார் வீதி, தேரடி வழியாக ஐந்து கண் பாலம் வரை சென்றது.

ஊர்வலத்தில் சமூகப் பாதுகாப்புத் திட்ட வட்டாட்சியர் சுபாஷ்சந்தர், துணை வட்டாட்சியர் அகத்தீஸ்வரன், நகராட்சி மேலாளர் என்.ராமலிங்கம், துப்புரவு ஆய்வாளர் எஸ்.ராமலிங்கம், இளநிலை உதவியாளர் சிவக்குமார், வருவாய் ஆய்வாளர் அருணாச்சலம், கிராம நிர்வாக அலுவலர் செந்தில்குமார் மற்றும் வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி மாணவிகள் பங்கேற்றனர்.

ஊர்வலத்தின்போது, பேருந்து, கார் உள்ளிட்ட வாகனங்களில் 100 சதவீத வாக்களிப்பை வலியுறுத்தும் விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டன.

புதன்கிழமை, 3 ஏப்ரல் 2019

தினமணி

# வாக்காளர் விழிப்புணர்வு முகாம்

வந்தவாசி, ஏப்.2: மக்களவைத் தேர்தலில் 100 சதவீத வாக்களிப்பை வலியுறுத்தி, வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி, இந்தியன் செஞ்சிலுவைச் சங்கம் சார்பில், வாக்காளர் விழிப்புணர்வு முகாம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற இந்த முகாமுக்கு, இந்தியன் செஞ்சிலுவைச் சங்க வந்தவாசி கிளைத் தலைவர் மு.ரமணன் தலைமை வகித்தார். கல்லூரி நிறுவனர் பி.முனிரத்தினம், சங்கப் புரவலர் வி.எஸ்.தளபதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி முதல்வர் எஸ்.மைதிலி வரவேற்றார்.



முகாமில் உதவித் தேர்தல் அலுவலர் அ.ந.லாவண்யா முன்னிலையில், மாணவிகளுக்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் குறித்து செயல்விளக்கம் அளித்த தேர்தல் அதிகாரிகள்.

ஆரணி மக்களவைத் தொகுதி உதவித் தேர்தல் அலுவலர் அ.ந. லாவண்யா வாக்களிப்பதன் அவசியம் குறித்து சிறப்புரையாற்றினார். முகாமில் பங்கேற்றோர் அனைவரும் வாக்காளர் உறுதிமொழி ஏற்றனர். மேலும், 100 சதவீத வாக்களிப்பை வலியுறுத்தும் பதாகையில் அனைவரும் கையெழுத்திட்டனர்.

பின்னர், மின்னணு வாக்குப் பதிவு இயந்திரத்தில் எப்படி வாக்களிப்பது என்பது குறித்து வட்டாட்சியர்கள் எஸ்.அரிக்குமார், அ.சுபாஷ்சந்தர் ஆகியோர் கல்லூரி மாணவிகளுக்கு செயல் விளக்கம் அளித்தனர். இந்தியன் செஞ்சிலுவைச் சங்க கிளைச் செயலர் பா.சீனிவாசன், துணைத் தலைவர் ரா.சரவணன், துணை வட்டாட்சியர் அகத்தீஸ்வரன், வருவாய் ஆய்வாளர் அருணாச்சலம், கிராம நிர்வாக அலுவலர் செந்தில்குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தினமலர்

ஞாயிறு மார்ச் 24, 2019

# ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி, வந்தவாசி

(Re-Accredited with 'A' Grade By NAAC) - (Recognised under Section 2 (f) & 12 (B) of UGC Act)-
(Permanent Affiliation Granted by Thiruvalluvar University-Vellore)



திண்டிவனம் சாலை, **வந்தவாசி** - 604 408, திருவண்ணாமலை மாவட்டம்

## 20-வது பட்டமளிப்பு விழா

நாள் : 24-03-2019 - ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 10-30 மணி, இடம் : கல்லூரி அரங்கம்





அவ்வமையம்

திருமதி. **S.விஜயராணி, I.R.S.**

Joint Commissioner, Delhi Customs
Ministry of Finance, Government of India, New Delhi.

*அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பட்டச் சான்றிதழ்களை வழங்கி பட்டமளிப்பு சிறப்புரை நிகழ்த்த அன்புடன் இசைந்துள்ளார்கள்.*

அனைவரும் வருக! வருக!!

**Ln.திரு. B.முனிரத்தினம்**
நிறுவனர்-ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி, வந்தவாசி

**Ln.திரு.M. ரமணன்** B.E.,
செயலர்
ஆட்சிமன்றக்குழு உறுப்பினர்
திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர்

முனைவர். **S.மைதிலி** M.Com., M.Phil., Ph.D.
முதல்வர்

சுவாமி அபேதானந்தா கல்வி அறக்கட்டளை, வந்தவாசி

**குறிப்பு:** பட்டம் பெறும் மாணவிகள் அனைவரும் பட்டமளிப்பு விழாவினை முன்னிட்டு பதிவு செய்து கொள்வதற்காக காலை 9.00 மணிக்குள் கல்லூரியில் இருத்தல் வேண்டும்.

தமிழ் சுடர்

## ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில்

# 20-ஆம் ஆண்டு பட்டமளிப்பு

### 974-மாணவிகளுக்கு பட்டங்களை டில்லி கஸ்டம்ஸ் இணை இயக்குனர் எஸ்.விஜயராணி வழங்கினார்

வந்தவாசி,மார்ச் 25 - வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் 20-வது ஆண்டு பட்டமளிப்பு விழா வில் 974-மாணவிகளுக்கு பட்டங்களை டில்லி கஸ்டம்ஸ் இணை இயக்குனர் எஸ்.விஜயராணி வழங்கினார்

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற 20-வது ஆண்டு பட்ட மளிப்பு விழாவிற்கு கல்லூரி நிறுவனர் ப.முனிரத்தினம் தலைமை தாங்கினார்.

கல்லூரி செயலரும், திருவள்ளுவர் பல்கலைக் கழக ஆட்சி மன்ற குழு உறுப்பினருமான மு.ரம ணன், லயன் முன்னால் ஆளுநர் வி.எஸ்.தளபதி, தெள்ளார் முன்னால் ஒன்றிய சேர்மன் சி.சீனுவாசன், லயன் சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர் கல்லூரி முதல்வர் முனைவர் எஸ்.மைதிலி அனைவரை யும் வரவேற்று கல்லூரி ஆண்டறிக்கையினை வாசித்தார். சிறப்பு விருந்தி னராக எஸ்.விஜயராணி கலந்து கொண்டு; 785-இளநிலை, 141- முதுநிலை மற்றும் 48-ஆராய்ச்சி ஆக மொ[illegible] 974-மாணவி களுக்கு பட்டங்களை வழங்கி பேசியது:-

வேலை எல்லோருக்கும் காத்து கொண்டு இருக்கிறது அதற்கு மாணவிகாளவிய நீங்கள் அறிவு, திறமைகளை வளர்த்து கொள்ள வேண்டும். படித்து கொண்டே இருக்க வேண்டும் அதனுடன் உங்கள் திறமைகளை வளர்த்து கொள்ள வேண்டும். நம்முடை பலம், பலவீனம் எது என்று தெரிந்து கொள்ள வேண்டும் வாய்பு என் கதவை தட்டவில்லை என்று கூற கூடாது. உன்னிடம் கதவு இருக்கிறதா என்று யோசியுங்கள் திறமை எங்கு இருக்கிறதோ அங்கு வேலைகான கதவு திறந்திருக்கும் அதற்கு உங்கள் முயற்சி தேவை உங்காளால் முடிந்த அளவிற்கு உங்கள் பெற்றோர்களை சந்தோஷமாக வைத்திருங்கள் நம்மால் முடியாது என்று ஒன்றும் கிடையாது அதற்கு உங்கள் திறமை, உழைப்பு, முயற்சி இருக்க வேண்டும் என்று பேசினார்.

24 மார்ச் 2019

மீடியா செய்தி

# ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி, வந்தவாசி

(Re-Accredited with `A' Grade By NAAC) - (Recognised under Section 2 (f) & 12 (B) of UGC Act)
(Permanent Affiliation Granted by Thiruvalluvar University-Vellore)

திண்டிவனம் சாலை, **வந்தவாசி** - 604 408, திருவண்ணாமலை மாவட்டம்

## 20-வது பட்டமளிப்பு விழா

நாள் : 24-03-2019 - ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 10-30 மணி, இடம் : கல்லூரி அரங்கம்



அவ்வமையம்

**திருமதி. S.விஜயராணி, I.R.S.**

Joint Commissioner, Delhi Customs
Ministry of Finance, Government of India, New Delhi.



*அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பட்டச் சான்றிதழ்களை வழங்கி பட்டமளிப்பு சிறப்புரை நிகழ்த்த அன்புடன் இசைந்துள்ளார்கள்.*

அனைவரும் வருக! வருக!!

**Ln.திரு.B.முனிரத்தினம்**
நிறுவனர்-ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி, வந்தவாசி

**Ln.திரு.M. ரமணன் B.E.,**
செயலர்
ஆட்சிமன்றக்குழு உறுப்பினர்
திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர்

**முனைவர்.S.மைதிலி M.Com.,M.Phil.,Ph.D.**
முதல்வர்

சுவாமி அபேதானந்தா கல்வி அறக்கட்டளை, வந்தவாசி

**குறிப்பு:** பட்டம் பெறும் மாணவிகள் அனைவரும் பட்டமளிப்பு விழாவினை முன்னிட்டு பதிவு செய்து கொள்வதற்காக காலை 9.00 மணிக்குள் கல்லூரியில் இருத்தல் வேண்டும்.

திங்கள்கிழமை, மார்ச் 25, 2019




வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் 20வது ஆண்டு பட்டமளிப்பு விழாவில் மாணவிகளுக்கு பட்டங்களை டில்லி கஸ்டம்ஸ் இணை இயக்குநர் எஸ்.விஜயராணி வழங்கினார். உடன் கல்லூரி நிறுவனர் ப.முனிரத்தினம், கல்லூரி செயலரும், திருவள்ளுவர் பல்கலைக் கழக ஆட்சி மன்ற குழு உறுப்பினருமான மு.ரமணன் ஆகியோர் உள்ளனர்.

இந்து தமிழ் திசை

வியாழன், ஏப்ரல் 11, 2019

இந்து தமிழ் திசை — தேர்தல் ஆணையம்

இணைந்து வழங்கும்

# வாக்களிப்போம்... ஜனநாயகம் காப்போம்..!




தேர்தல் திருவிழாவில்
தனது முத்திரை வாக்கினை
அளிக்கவிருக்கும்
முதல் தலைமுறை வாக்காளர்களே...
வாக்களிக்கத் தயாராகிவிட்டீர்களா..?
மக்களாட்சியின் மாண்பை,
வாக்களிப்பதன் அவசியத்தை,
இந்தியத் தேர்தலின்
சிறப்பை அறிய வாருங்கள்...
சந்திப்போம்; சிந்திப்போம்!

முதல் தலைமுறை வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சியை
தொடங்கி வைப்பவர்
**திரு க.சு.கந்தசாமி இ.ஆ.ப.**
திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர்



நாள்: 12 ஏப்ரல் 2019 நேரம்: 10:00 AM - 12:30 PM
இடம்: **ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரி**
திண்டிவனம் நெடுஞ்சாலை, வந்தவாசி – 604 408
திருவண்ணாமலை மாவட்டம்

Venue Partner

Supported By
SHANKAR IAS ACADEMY™
The Best IAS Academy in South India SINCE 2004

**வாருங்கள்... வாக்களிப்போம்... ஜனநாயகம் காப்போம்..!**

சனி, ஏப்ரல் 13, 2019

இந்து தமிழ் திசை





▲ 'இந்து தமிழ் திசை' நாளிதழும், தேர்தல் ஆணையமும் இணைந்து முதல் தலைமுறை வாக்காளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் நேற்று நடைபெற்றது. இதில் பங்கேற்ற மாணவிகள். அடுத்த படம்: விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பேசும் திருவண்ணாமலை ஆட்சியர் கந்தசாமி. அருகில், கல்லூரி தாளாளர் முனிரத்தினம், முதல்வர் மைதிலி உள்ளிட்டோர்.

### ஜனநாயகத்தை நாம் வலுப்படுத்த வேண்டுமானால்

# வாக்களிப்பதன் அவசியத்தை உணர வேண்டும்

● திருவண்ணாமலை ஆட்சியர் கந்தசாமி வலியுறுத்தல்

■ வந்தவாசி

ஜனநாயகத்தை நாம் வலுப்படுத்த வேண்டுமானால் வாக்களிப்பதன் அவசியத்தை உணர வேண்டும் என்று திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் க.சு.கந்தசாமி தெரிவித்தார்.

'இந்து தமிழ் திசை' நாளிதழும், தேர்தல் ஆணையமும் இணைந்து நடத்திய முதல் தலைமுறை வாக்காளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியைமாவட்ட ஆட்சியர் க.சு.கந்தசாமி குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்துப் பேசியதாவது:

'இந்து தமிழ் திசை' நாளிதழ் வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சியை பல ஊர்களில் நடத்தி வருகிறது. இதில், திருவண்ணாமலை மாவட்டத்தையும் ஒரு இடமாகத் தேர்வு செய்து வந்தவாசியில் இந்த நிகழ்ச்சியை நடத்துவது உண்மையிலேயே பெருமைக்குரியது.

மக்களாட்சியில் முக்கியமானது தேர்தல். இந்த தேர்தலுக்காக திருவண்ணாமலை மாவட்டத்தில் மட்டும் 12 ஆயிரம் அரசு அலுவலர்கள் பணியாற்றுகின்றனர். 6 ஆயிரம் காவல் துறையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். திருவண்ணாமலை மாவட்டத்தில் ஒரே ஒரு வாக்காளர் உள்ள வாக்குச் சாவடி கூட உள்ளது. அதற்காக, தனியாக அலுவலர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர். ஜனநாயகத்தில் ஒவ்வொரு வாக்கும் முக்கியம் என்பதன் அடிப்படையில் அந்த வாக்கையும் பெற முயற்சித்துள்ளோம்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் இந்த தேர்தலில் 100 சதவீதம் வாக்குப் பதிவு நடைபெற வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். அதற்கு, நீங்கள் அனைவரும் வாக்களிக்க வேண்டும். வாக்காளர் பட்டியலில்




உங்கள் பெயர் உள்ளதா? என்பதை உடனடியாக நீங்கள் அறிய வேண்டும்.

இதுவரை வேகமாக காரில் சென்றவர் கூட தற்போது உங்களை பார்த்ததும் வணக்கம் வைப்பார். 'அதற்கான வலிமை உங்கள் ஒரு வாக்குக்கு உண்டு. சில கிராமங்களில் எங்கள் ஊரில் குடிநீர் பிரச்சினை உள்ளது. மின்விளக்குகள் சரிவர எரியவில்லை. அதனால், கருப்புக் கொடி காட்டுவோம், தேர்தலை புறக்கணிப்போம் என்று மக்கள் பலர் கூறுகின்றனர். இது தீர்வு கிடையாது. இதற்கான தீர்வை நீங்கள் வாக்களிப்பதன் மூலமே பெறமுடியும்.

ஒரு வாக்கின் மதிப்பு என்ன என்பதை நீங்கள் உணர வேண்டும். நம் வாக்குரிமையை சரியாக பயன்படுத்தாமல் நிரந்தர மாற்றத்தை நாம் கொண்டு வர முடியாது. ஜனநாயகத்தை நாம் வலுப்படுத்த வேண்டுமானால் வாக்களிப்பதன் அவசியத்தை உணர வேண்டும். ஜனநாயகத்தில் முதல் பங்கு வாக்குரிமை. அதன் மதிப்பை உணர்ந்து இந்த விழாவில் பங்கேற்ற அனைவரும் வாக்களிக்க வேண்டும். நம் ஜனநாயகத்தை வலுப்படுத்த உறுதி ஏற்க வேண்டும்.

முதல் தலைமுறை வாக்காளர்களாக பதிவு செய்துள்ளவர்கள் 1.4 சதவீதம் பேர் உள்ளனர். மற்றவர்கள் என்ன ஆனார்கள் என்பது தெரியவில்லை. முதல் தலைமுறை வாக்காளர்கள் அலட்சியமாக இருக்கக் கூடாது. அனைவரும் வாக்காளர் பட்டியலில் பதிவு செய்யவும், வாக்களிக்கவும் கவனம் செலுத்த வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

விழாவில் இந்து தமிழ் திசை' முதுநிலை உதவி ஆசிரியர் மு.முருகேஷ் சிறப்புரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் கல்லூரி தாளாளர் பா.முனிரத்தினம், முதல்வர் முனைவர் மைதிலி, உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் அன்னம்மாள், லாவண்யா, உதவி வாக்குப் பதிவு அலுவலர் ஹரிகுமார் உட்பட பலர் பங்கேற்றனர். இந்நிகழ்ச்சியை அரிமா இரா. சரவணன் தொகுத்து வழங்கினார்.

முன்னதாக தேர்தலில் வாக்களிப்பதன் அவசியத்தை வலியுறுத்தி கல்லூரி மாணவிகள் பங்கேற்ற விழிப்புணர்வு நாடகம் நடைபெற்றது. கல்லூரி மாணவிகள் அனைவரும் 100 சதவீதம் வாக்களிப்போம் என்று உறுதிமொழி ஏற்றனர்.